G.C.E. (A/L) 1987
Physics: VARAM
நடைபெறுகின்றது.
திங்கள், வெள்ளி;
3-4 ELECTRICITY
திங்கள், வெள்ளி;
4-5 MECHANICS
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

DAY CLASS
A/L PHYSICS
MECHANICS
ஆரம்பம் – 1-12-86
திங்கள் காலை 7-30 மணி
MON - FRI - 7-30 A.M
by
SATHTHIYASEELAN
NEW MASTER INSTITUTE
B.M.C. Lane, JAFFNA.

மலை:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு கார்த்திகை மீ 20 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 03 (06-12-1986) SANJEAVY. REGENERATIVE TAMIL WEEKLY சிகரம் :46

## கருத்துக் கலசம் — மயூரா

### நூல் நிலையம் நிறுவுவோம்

வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகின்றது அறிவை வளர்க்க அது உதவுகின்றது வாசிப்பதன் மூலம் மனிதனது சிந்தனையும் தூண்டப்படுகின்றது மொத்தத்தில் வாசிப்பு அறிவைப் பெருக்குவதற்கான முக்கிய கருவிகளில் ஒன்று

உலகில் உள்ள ஏனைய ஜீவராசிகளை விட மனிதன் உயர்ந்தவனாகக் கருதப்படுகின்றான். அவ்வாறு அவனை உயரத்தில் வைத்துப் பார்ப்பதற்கு மேலதிக தகைமை கருவது ஆறுவது அறிவு.

அறிவை வளர்ப்பது கல்வி அந்தக் கல்வியில் ஒருபகுதி வாசிப்பு. பாடசாலை சென்று கல்வி பயிலாதவர்கள் கூடச் சிறந்த அறிஞர்களாகி இருக்கிறார்கள்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் வாசிப்பு மூலமே அந்த நிலையை அடைய முடிந்தது

வாசிப்புப் பழக்கத்தை மக்களிடையே பெருமளவில் அறிமுகப்படுத்தினால் தான் சமூகத்தில் அறிவு வளரும். அதற்கு இன்றி அமையாதவை நூல்நிலையங்கள்.

வீடுதோறும் நூல் நிலையங்கள் இருந்தால் மிகவும் சிறந்தது. ஆனால் எல்லோரது பொருளாதார வசதியும் அதற்கு இடம் கொடுக்காது.

அதனால்தான் கிராமத்துக்குக் கிராமம், ஊருக்கு ஊர் பொது நூல் நிலையங்கள் அவசியமாகின்றன. பொருள் வசதிகுறைந்தவர்களும் நல்லறிவு தரவல்ல நூல்களைப் படிக்க வசதி செய்யப்படவேண்டும்.

வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்களைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கு அறிவுச் சுடர் ஏற்றிய நூல் நிலையங்கள் அறியாலயங்கள் பல அரசாங்கப் பயங்கரவாதத்துக்கு இரையாகிவிட்டன அந்த அறிவுக் களஞ்சியங்களை எரிப்பதால் தமிழர்களை அறிவிலிகளாக்கலாம் என நினைத்தார்களோ என்னவோ . . . ?

அதைக் கண்டு நாம் சோர்ந்துவிடலாகாது. ஊரெங்கும், நகரமெங்கும் நூல் நிலையங்களை ஆரம்பிக்க வேண்டும்.

அந்த நூல்நிலையங்களில் சிறுவர் முதல் பெரியோர் வரை வாசித்துப் பயன் பெறக்கூடிய நூல்களை வைக்கவேண்டும். ஆனால் நூல்களைத் தெரிவு செய்வதில் கவனம் தேவை. மக்களை வேறு திசை திருப்பக்கூடிய, தீய வழி செலுத்தக்கூடிய நூல்களைக் கொண்ட நூல் நிலையங்கள் அறிவாலயங்கள் ஆகா. அவை சமூகத்தைச் சீரழிக்கும் நிலையங்கள் ஆகிவிடும்.

நல்லறிவு தரக்கூடிய நூல்நிலையங்களை கிராமம் தோறும் நிறுவுவதே இப்போதைய முக்கிய பணியாகும். பெரிய கட்டடங்களில் தான் அவை

(8 ம் பக்கம் பார்க்க)





விஜே குழுவுடன் வந்த பௌத்த குருமார்களில் சிலரை முதல்படத்திலும் சிறை பிடிக்கப்பட்ட சிப்பாய்களில் ஒருவரான அஜித் சந்திரசிறியின் அண்ணன் நிஹால் சந்திரசிறி, சிறியதாயார் ஆரியவதி, சகோதரி சுமனா சந்திரசிறி ஆகியோரையும், மற்றைய சிப்பாய் பண்டாராவின் தாய் ஆர். எம் லீலாவதி, தங்கை சுசிலா ஆகியோரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

### சுமுகமாக நடந்தது

யாழ்ப்பாணம், டிச. 6

நேற்று ஆரம்பமான க. பொ. த. (சாதாரண) பொதுப் பரீட்சை எவ்வித குழப்பங்களும் இன்றி சுமுகமாக நடைபெற்றது என யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

தொடர்ந்தும் பரீட்சை சுமுக நிலையில் நடந்து முடிய பொதுமக்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

(அ-5)

# பிரச்சினையைத் தீர்க்க அரசை நிர்ப்பந்தியுங்கள்

## விஜே குழுவிடம் புலிகள் நேற்றைய பேச்சில் வலியுறுத்து

— க. இரத்தினராஜசிங்கம், எம். பேரின்பநாயகம் —

யாழ்ப்பாணம், டிசம்பர் 6

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்குமாறு விஜே குழுவினர் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று புலிகள் வலியுறுத்தினர்.

கொழும்பிலிருந்து வந்த விஜே குழுவினருக்கும், தளபதி கிட்டு தலைமையிலான புலிகள் குழுவினருக்கும் இடையில் நேற்று மாலை நடைபெற்ற முதற்கட்டப் பேச்சில் இவ்வாறு வற்புறுத்தப் பட்டது.

ஆயிரக்கணக்கான எமது மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். எமது இளைஞர்கள் சிறையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். —

அரசு எமது பிரச்சினையைச் சற்றுத்தானும் சிந்திப்பதாயில்லை. —

எனவே பிரச்சினையைத் தீர்க்குமாறு நீங்களே அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். —

உங்களுடன் நாம் முதலில் நடத்திய சந்திப்பில் பல சிங்கள மக்கள் எம்மைப் பற்றி உணர்ந்தி

(8ஆம் பக்கம் பார்க்க)

### பௌத்த குருமார் எல்லோரும் தமிழருக்கு எதிரானவர்கள் அல்லர்

யாழ்ப்பாணம், டிச. 6

பௌத்த மதகுருமார்கள் எல்லோரும் தமிழருக்கு எதிரானவர்கள் அல்லர். தமிழருக்குச் சாதகமானவர்கள் பௌத்த மதகுருமார் மத்தியிலும் இருக்கிறார்கள்.

அதை யாழ் தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டவே இந்த நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு வந்துள்ளோம்.

இப்படிச் சஞ்சீவிக்குத் தெரிவித்தார் வண. பட்டபொல அனோமதாஸி

(8ஆம் பக்கம் பார்க்க)

### கப்பலில் ஆயுதங்கள் வந்தன

கொழும்பு, டிச. 6

கடந்த வியாழன் கொழும்புத் துறைமுகத்திற்கு மூன்று கொள்கலன்கள் நிறைய ஆயுதங்களுடன் கப்பல் ஒன்று வந்தது.

அந்தக் கப்பலில் இருந்து ஆயுதங்கள் இன்னொரு கப்பலுக்கு மாற்றப்பட்டு வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்று அறிய வருகிறது.

சில ஆயுதங்கள் ஹெலிக்கொப்டர்கள், விமானங்கள் மூலம் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்று அறிய வருகின்றது. (இ-ஐ-எ)



சுபாஸ் விடுதி வாயிலில் விஜயகுமாரணதுங்காவை புலிகள் பிரமுகர் ஜொனி கைலாகு கொடுத்து வரவேற்கிறார். அருகில் மக்கள் கட்சி உப தலைவர் ஒஸி அபயகுணசேகராவும், கட்சியின் நிர்வாகச் செயலாளர் வை. பி. டி. சில்வாவும் காணப்படுகின்றனர்.

(மற்றும் படங்கள் 8 ஆம் பக்கத்தில்)

# விஜே குழுவினருக்கு வழி எங்கும் வரவேற்பு

## பல இடங்களில் உரையாற்றினர்

யாழ்ப்பாணம், டிச. 6

விஜே குழுவினர் நேற்றுக் காலை 5 மணி அளவில் அனுராதபுரத்தில் இருந்து யாழ் நோக்கிப் புறப்பட்டனர்.

காலை 7 மணி அளவில் வவுனியா வந்து சேர்ந்தனர்.

அங்கு ஒரு கூட்டத்தில் திரு விஜய குமாரணதுங்க பேசினர்.

வவுனியாவில் வைத்து வவுனியா விகாராதிபதி வண சியம்பலகஸ்வேவ தேரர் குழுவுடன் சேர்ந்து கொண்டார்.

வழி நெடுக மக்கள் குழுமி நின்று கையசைத்து விஜே குழுவினரை வழி அனுப்பிவைத்தனர்.

புளியங்குளம் முத்துமாரி அம்மன் கோயிலில் இடம் பெற்ற பூசையில் விஜே குழு கலந்து கொண்டது. பின்னர் அங்கு குழுமியிருந்த மக்கள் மத்தியில் விஜே உரையாற்றினர்.

பின்னர் மாங்குளத்தில் வழி மறிக்கப்பட்டு உபசரிக்கப்பட்டார்.

அங்கும் ஒரு கூட்டத்தில் விஜே உரைநிகழ்த்தினர்.

கிளிநொச்சியிலும் விஜே குழுவினர் வழி மறிக்கப்பட்டு உபசரிக்கப்பட்டனர். அங்கு திரண்டிருந்த மக்கள் மத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## நீண்ட பயணத்தின் பின் மாலை 5 மணிக்கு வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், டிச. 6

சிறிலங்கா மக்கள் கட்சிச் செயலாளர் விஜய குமாரணதுங்க தலைமையிலான பௌத்த மத குருமார்கள் குழு நேற்று மாலை ஐந்துமணி அளவில் சுபாஸ் விருந்தினர் விடுதியை வந்தடைந்தனர்.

பௌத்தமத குருமார்களுக்கு வண. அனோமதாஸி மகாநாயக்க தேரர் தலைமை வகித்தார்.

விடுதி வாசலில் முதலில் திரு. விஜயகுமாரணதுங்கவை தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகள் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

அதன்பின்னர் விடுதி மேல்மாடிக்கு திரு.விஜயகுமாரணதுங்க, பௌத்த மத குருமார்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

சுமார் 90 பேர் இந்த நல்லெண்ணக் குழுவில் வந்தனர்.

புலிகளினால் சிறைப் பிடிக்கப்பட்ட இரண்டு சிப்பாய்களின் உறவினர்கள் 12 பேரும் வந்திருந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### களைப்புத்தீர சுடச்சுட "ரேல்"

கொழும்பில்இருந்து புதன்கிழமை மாலை யாழ்ப்பாணம் நோக்கித் தமது நீண்ட பயணத்தை ஆரம்பித்து நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த விஜே குழுவினர் மிகவும் களைப்படைந்து காணப்பட்டனர்.

இவர்கள் மதிய உணவு உண்ணாததும் களைப்புக்கு ஒரு காரணம் ஆகும்.

இரண்டு நாள் நீண்ட பயணத்தின் வாட்டம் இவர்களில் நன்கு தெரிந்தது.

நிலைமையை புரிந்து கொண்ட விடுதலைப் புலிகள் இவர்களுக்கு சுடச்சுட ரேல் தயாரித்துப் பரிமாறினர். கேக்கும் தேநீரும் வழங்கப்பட்டன.

### சுபநேரம்

06—12—1986

சனிக்கிழமை

சுபநேரம்:

3 .17 முதல் 4 .47 வரை

ராகுகாலம்:

9.17 முதல் 10.47 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

விநாயக ஷஷ்டி விரதம்

## புலிகளுடன் பேசிய இராணுவத்தினர் இடமாற்றப்பட்டனர்

யாழ்ப்பாணம், டிச. 6

புலிகளுடன் நேரடிப் பேச்சுநடத்திய கோட்டை இராணுவ உயர் அதிகாரிகள் உடனடியாக அரசினால் இடமாற்றம் செய்யப்பட்டார்கள்.

கேர்ணல் ஆனந்த வீரசேகரா, காப்டன் கொத்தலாவல உட்பட பத்து சிப்பாய்களும் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இந்தத் தகவலை நேற்று திரு குமாரணதுங்கவுடன் நடத்திய சந்திப்பின்போது கிட்டு தெரிவித்தார்.

இராணுவ அதிகாரிகள் தாமாக எம்மைச் சந்திக்கவில்லை அரசாங்கத்தின் அனுமதியுடனேயே எங்களுடன் பேசினர். ஆனால் அவர்கள் இடமாற்றம் செய்யப்

(8ஆம் பக்கம் பார்க்க)

# சிப்பாய்களின் பெற்றோர்

## ஆனந்தக் கண்ணீர் மல்க உச்சி மோந்தனர்

யாழ்ப்பாணம், டிச 6

புலிகளினால் சிறை பிடிக்கப்பட்ட இரு இராணுவச் சிப்பாய்களின் தாய், தந்தையர், உறவினர்கள் அவர்களைச் சந்தித்த காட்சி மனதை நெகிழவைப்பதாக அமைந்தது

பழைய பூங்கா முகாமில் வைத்து இச் சந்திப்பு இடம்பெற்றது

சுபாஸ் விருந்தினர் விடுதியில் இருந்து சிப்பாய்களின் பெற்றோர், உறவினர்கள் பழைய பூங்கா முகாமுக்கு மாலை 7 மணியளவில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு கிட்டு – விஜே சந்திப்பு இடம் பெற்றது. அதன் பின்னர் சிப்பாய்களைச் சந்திக்க உறவினர்கள் வந்திருக்கின்றனர் என்று விஜே, கிட்டுவிடம் தெரிவித்தார்.

### காலில் விழுந்து அழுதனர்

அதைத் தொடர்ந்து உறவினர்கள் கிட்டு ரஹீம் ஆகியோரின்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

வாடிக்கையாளர்களுக்கு ஒரு முக்கிய
அறிவித்தல்
இன்றைய காலகட்டத்தில் உங்களின் நலன்கருதி
1ஆம் கட்டிடம், நவீன சந்தை மேல் மாடியில் உள்ள
எமது கிளை நிறுவனம்
05-12-1986 தொடக்கம்
ஸ்ரான்லி ரேட்டிற்கு
(V. K. ராஜரட்ணத்திற்கு எதிராகவும், விக்ரர் அன் சன்சிற்கு பக்கத்திலும்)
இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது
(இங்கு திருமணக்கூறை, பட்டுவேட்டி போன்ற சகலவிதமான புடைவைத் தினுசுகளும் கிடைக்கும்.)
ஹப்பி ரெக்ஸ்ற்
இல: 104. ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடிவாதம் வம்பு பண்ணும் தர்மிஷ்டர் பக்கத்தில் 'பந்து'!

ஒன்றை, மூன்றாக்கிக் குழப்புவோம் என்று திட்டம் போட்டவர்கள், அந்த மூன்றில் ஒன்றை வடக்குடன் சேர்த்து இணைத்தால் என்ன? என்ற கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் குழம்பிய நிலையில் நிற்கிறார்கள்.

பிடிவாதம், வம்பு பண்ணக் கூடாது என்பர் அனுபவசாலிகள்.

தமிழருக்கு தாயகம் வரக்கூடாது என்பதில் 1957 முதல் பிடிவாதமாக இருந்து வருபவர் தர்மிஷ்டர். தாம் ஒரு காலத்தில் எதிர்த்ததை இப்போது ஆதரித்து வழங்க கூடாது என்று வம்பு பண்ணுபவர்.

அந்தக் கர்ம பலன் திரும் காலம் வந்து விட்டதோ என்ற எண்ணம் எழும் அளவுக்கு இன்று தமிழர் பிரச்சினை உருவெடுத்து விட்டது

இந்திய ராஜதந்திரத்தின் நுட்பமான அணுகுமுறை தமிழர் தாயகப் பிரச்சினையில் எப்படிச் செயல்படுகின்றது என்பதைப் பார்த்தால், தர்மிஷ்டர் எப்படியான இடுக்குக்குள் மாட்டிக் கொண்டிருக்கின்றார் என்பது புரிந்துவிடும்.

வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தை அப்படியே இணைக்க முடியாது— இது தர்மிஷ்டரின் வாதம்.

## அன்றும் இன்றும்

கிழக்கில் சிங்களவரும் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக இருக்கின்றனர் என்பது இன்று அவர் அதற்குக் கூறும் காரணம்.

1957 இல் இக்காரணத்தை அவர் கூறவில்லை.

அன்று அவர் கூறியது இரண்டும் இணைந்தால் தமிழருக்கு ஒரு தாயகம் வந்துவிடும் என்பது தான்.

இன்று கூறும் காரணம் சந்தர்ப்பத்துக்கு ஏற்றது. அன்று கூறியது அவர் உள்ளத்தில் இருந்து வந்தது.

இன்று 'தமிழர் தாயகம்' பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துள்ளது. இது ஒன்றே போதும் அன்று தர்மிஷ்டரின் உள்ளத்தில் 'தாயகம்' ஏற்படுவதைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் புதைந்து கிடந்தது என்பதை நிரூபிக்க!

இல்லை என்றால் 30 ஆண்டுகளின் பின்னர் அதே தர்மிஷ்டர் நடத்தும் ஆட்சியில் அவர் முன்னால் இப்பிரச்சினை வரவேண்டுமா?

இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியா தலையிட்டது 1983 இல். அந்த ஆண்டு நவம்பரில் புதுடில்லி சென்று அன்னை இந்திராவைச் சந்தித்தார். அப்போதே வடக்கு கிழக்கு இணைப்பை நிராகரித்து விட்டார்.

1986 ஜூலையில் மாகாணசபைத் திட்டத்தைக் கொண்டு வந்தார் இணைப்பு இல்லை என்றார்.

பெங்களூர் சென்ற போதுதான் கிழக்கை

## ஆட்டத்தை முடிப்பாரா அல்லது தொடர்வாரா?

மூன்றாக இனரீதியில் பிரிக்கும் திட்டத்தை முன்வைத்தார்

இத்திட்டத்தை முன்வைத்தபோது, தனது குடுமியை இந்தியாவிடம் கொடுத்துவிட்டது தர்மிஷ்டருக்குப் புரியவில்லை.

திருகோணமலையைச் சேர்த்து சிங்களமாகாண சபை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று நப்பாசை காரணமாகத்தான் மும்மாகாணத்திட்டத்தை அவர் சமர்ப்பித்தார்.

ஆனால் இணைப்பு கோரிக்கை வேறு விதமாக வரும் என்று அவர் யோசிக்கவில்லை.

கிழக்கில் தமிழருக்கு ஒரு மாகாணசபை, சிங்களவருக்கு ஒரு மாகாண சபை, முஸ்லிம்களுக்கு ஒருமாகாணசபை, வடக்கில் தமிழருக்கு ஒரு மாகாண சபை இப்படித்தான் அவரின் திட்டம் இருந்தது.

### நிலைகுலைய வைத்த கேள்வி

சிங்களவருக்கான திருகோணமலை மாகாண சபை எல்லைக்குள் வரும் தமிழ்ப் பகுதிகளை மட்டக்களப்புத் தமிழ் மாகாணசபையுடன் சேர்க்க எல்லை நிர்ணயக் கமிஷன் நியமிப்பது — இப்படி எல்லாம் தர்மிஷ்டரின் யோசனைகள்.

கிழக்கில் அப்படி உருவாகும் தமிழர் மாகாண சபையை வடக்கு மாகாண சபையுடன் சேர்த்து தமிழரின் அபிலாஷையான 'தாயகக்

**உள்ளும் புறமும்** — குறுமுனி

கோட்பாட்டை' ஏற்கலாமே!

இது இந்தியாவின் கேள்வி இக்கேள்விதான் இன்று கொழும்பு ஆட்சியாளரை நிலை குலையச் செய்துள்ளது

கிழக்கு முழுவதையும் சேர்க்க முடியாது – சிங்களவரும் முஸ்லிமும் பெரும்பான்மையினர் என்று சொன்னவர்கள், கிழக்கு மாகாணத்தில் உருவாக்க ஒப்புக் கொண்ட தமிழர் மாகாண சபையை, திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ்ப்பகுதிகளுடன் வடக்கு மாகாணத்துடன் இணைக்க முடியாது என்று கூறுவது தர்மிஷ்டத்துக்கு விரோதமானது.

அப்படி முடியாது என்று எப்படிக் கூறுவது? என்ற தர்மசங்கட நிலைக்கு ஆளாகியிருக்கிறார் தர்மிஷ்டரும் அவரின் ஆதரவாளர்களும்.

### அச்சம்

அப்படிக் கூறினால் தமிழ்மக்களை பிரிக்க திட்டமிட்டு இலங்கை அரசு செயலாற்றுகின்றது என்ற 'மறைமுக தந்திரம்' வெட்ட வெளிச்சமாகிவிடும் என்ற அச்சம் இலங்கை அரசுக்கு உண்டு

கிழக்கில் வாழும் தமிழர் வடக்கு மாகாண சபையுடன் சேர விரும்பவில்லை என்று தர்மிஷ்டரால் கூற முடியாது.

தனது அரசில் உள்ள தமிழ் அமைச்சர்களைக் கொண்டு கூறவும் வைக்கமுடியாது.

கிழக்கே செல்ல முடியாத நிலைமையில் உள்ள தமிழ் அமைச்சர்கள் எப்படி கிழக்குத் தமிழர் வடக்குத் தமிழருடன் சேரமாட்டார்கள் என்று கூறுவது?

அப்படி சேருவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு வைக்க வேண்டும் என்றும் அரசினால் வலியுறுத்த முடியாது.

தமிழரும் தமிழரும் இணைய சர்வஜன வாக்கெடுப்பா? என்ற கேலிப் பேச்சும் எழும்.

### இந்தியாவின் வாதம்

இதே நேரத்தில் இந்தியா, தமிழ்ப் போராளிகள் நிலை குறித்து திருப்தி தெரிவித்துள்ளது

''சரியான மாற்றுத் தீர்வு தாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் கிடைக்குமானால் தமிழ் ஈழத்தைக் கைவிட போராளிகள் இணங்குகின்றார்கள்.

ஆகவே இரண்டு தமிழ் மாகாணங்களையும் இணைத்து தமிழர் தாயகக் கோட்பாட்டை ஏற்கலாமே'' — இது இந்திய தரப்பின் வாதம்.

இதைத்தான் இணை அமைச்சர் குழு 4 மணித்தியாலங்கள் கொழும்பில் தர்மிஷ்டருடன் விவாதித்தது.

பெங்களூரில் வைத்து ராஜீவுக்கு கொடுத்த உறுதி மொழிகள், கொழும்பில் வைத்து இணை அமைச்சர்களிடம் முன்னர் கொடுத்த உறுதி மொழிகள் ஆகியவற்றில் இருந்து தர்மிஷ்டர் மாறிவிட்டார் என்று பிரபல அரசியல் விமர்சகர் ஜி. கே. ரெட்டி 'இந்து' வில் வேறு எழுதியிருக்கிறார்.

அது மட்டுமல்ல இனப் பிரச்சினைத் தீர்வுக்கான 'பந்து'ம் தர்மிஷ்டரின் கையில்தான் இருக்கின்றது என்றும் திரு ரெட்டி கூறியிருக்கிறார்.

தர்மிஷ்டர் இம்முறை 'பந்தை' அடித்து ஓட்டத்தை எடுத்து ஆட்டத்தை முடித்துப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுபிடிக்க உதவுவாரா அல்லது தொடர்ந்து ஓட்டம் எடுக்காமலே ஆட்டத்தைத் தொடர்ந்து இழுத்தடிப்பாரா?

இருந்துதான் பார்ப்போமே!

---

# அரசாங்க அலுவலகங்களில்.... 'சிகதி'

### பாதுகாப்புச் செலவு பயங்கரம்

கிழக்கு மாகாணப் பகுதியில் அரச திணைக்களங்களில் கடமை புரிந்த பணியாளர்கள், அரசிற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதென்ற புகாரின் பேரில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்னர் பல சிறைச்சாலைகளில் அரச விருந்தினராகக் காலம் கழித்தும் உண்மையை தெளிவு படுத்த வலுவற்ற நிலையிலும் தம் மனச்சாட்சிக்கு மாறாக தாங்கள் மேற்கொள்ளாத கருமங்களுக்கும் ஒப்புதல் கொடுத்ததன் நிமித்தம் விடுவிக்கப்பட்டனர். ஆனால் ஓர் உயர் தமிழ் அதிகாரி இன்னமும் தமக்கெதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு மறுப்பு தெரிவித்து நீதிக்காக வழக்கு நடத்திக் கொண்டிருக்கின்றார்.

ஆரம்பத்தில் கைது செய்யப்பட்ட இவ்வரச பணியாளர்கள் பல சிறைச்சாலைகளில் காலத்திற்கு காலம் இடமாற்றம் செய்யப்பட்டு வந்தனர். இறுதியாக பூஸாவில் இருந்த சமயம் தற்பொழுது அரசில் அங்கம் வகிக்கும் உதவி அமைச்சர் ஒருவர் அங்கு விஜயம் செய்த பொழுது தங்களுக்கு பெரும்பான்மை சமூகத்தைச் சார்ந்த அங்கு கடமையாற்றும் பணியாளர்கள் நடந்து கொள்ளும் முறைபற்றி குறிப்பிட்டு ஏதாவது வழியில் அங்கு சுமுகமாக தாங்கள் இருக்க வழி செய்யும்படி கேட்டுக் கொண்டனர் சகல விடயங்களையும் மிகவும் அவதானத்துடன் செவிமடுத்த அந்த உதவி அமைச்சர் மூன்று தினங்களுக்குள் தமிழ் பேசத் தெரிந்த பணியாளர்களை நியமித்தார். அவர் வேறுயாருமல்ல எப்பொழுதும் நீதி கேட்கும் செங்கடகல பா. உ. இப்படி எல்லோரும் நடந்தால் – நம் நாட்டிற்கு நிகர் வேறு எது............?

* * *

பாதுகாப்புச் சேவை திணைக்களத்தினால் செலவு செய்யப்படும் விடயங்கள் பற்றி அண்மையில் நாடாளுமன்றத்தில் அத்தனகல தொகுதி எம்.பி. பேசும் பொழுது இங்கே தற்பொழுது பாதுகாப்பிற்காக நிமிடத்திற்கு 30,000 ரூபாவும் நாளொன்றிற்கு முப்பது லட்சம் ரூபாவும் செலவு செய்யப்படுகின்றதென்ற அதிர்ச்சி தரும் தகவலை வெளியிட்டார். இந்தப் பயங்கரத்தைப் பார்க்கும் பொழுது நாட்டின் அபிவிருத்தி எவ்வளவிற்கு பின் தள்ளப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது பதவி மோகமும் கட்சி அரசியல் பற்றும் இக்கெடுபிடிகளுக்கு உதவுகின்றன.

* * *

இலங்கையில் 4,30,055 மின் பாவனையாளர்கள் உள்ளதாகவும் 4500 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. மின்சாரத்தின் உதவியினால் கிராம மட்டத்தில் உள்ள ஒருவர் தனது தொழில் திறமையை தனது பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்த முடியும் கிராமப் புறங்களை அபிவிருத்தி செய்வதே மின்சார சபையின் நோக்கமுமாகும். ஆகையால் இங்கும் அதிகாரிகள் சிவப்பு நாடா முறைகளைத் தளர்த்தி இதுவரை மின்சாரம் இல்லாத கிராமங்களுக்கு உடன் வேண்டிய அபிவிருத்தி திட்டங்களை உருவாக்கி செயற்படுத்துவது கிராம மக்களின் நல்வாழ்விற்கு ஒளி ஊட்டுவதாகும். சட்டங்களையும் விதிகளையும் ஒரு செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான முறையில் நியாயப்படுத்தி நம் பகுதி மக்களுக்கு உதவ வேண்டும். இதனால் பொருளாதார அபிவிருத்திக்கு அதிக இடமுண்டு

* * *

பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்கள் தென் இலங்கைக்கு செல்லாது இங்கே பரீட்சையை எழுதுவதற்கு ஒழுங்குகளைச் செய்த உபவேந்தருக்கு சம்பந்தப்பட்ட மாணவர்கள் நன்றி தெரிவித்திருந்தனர். நாமும் அவர்களுடன் சேர்ந்துகொள்ளுகின்றோம். இவ்விடயம் பற்றி இப்பத்திரிகையில் ஏற்கனவே குறிப்பிட்டு ஐ. சி. எம். ஏ. போன்ற பரீட்சைகளையும் இங்கே நடத்துவதற்கான ஒழுங்குகளை அதற்கு பொறுப்பானவர்கள் செய்யவேண்டும் எனவும் எழுதியிருந்தோம். இது விடயமாக சம்பந்தப்பட்ட மாணவர்கள் முன்னர் ஒரு முறை அரசாங்க அதிபரை சந்தித்ததாக செய்தி வெளிவந்திருந்தது. இதற்கும் இப்பரீட்சையுடன் தொடர்புள்ளவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அந்த வசதியைச் செய்தால் மாணவர்கள் மன நிறைவுடன் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

---

**1ஆவது பிறந்த தின வாழ்த்து**



**செல்வன் பிரேந்திரா பாலகிருஷ்ணன்**

பாலகிருஷ்ணன் விக்கினேஸ்வரி தம்பதிகளின் ஏகப் புதல்வன் பிரேந்திரா இன்று 6–12–1986 தனது முதலாவது பிறந்த தினத்தை Bahrainஇல் மிகக் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்ப பா, அப்பப்பா, அப்பம்மா, பிரான்ஸ் (France)இல் இருக்கும் பெரியமாமா, ஆசைமாமா, Bahrainஇல் இருக்கும் மாமா, மாமி, மச்சாள், சின்ன மாமா, சித்தி (வவுனியா), பூட்டி. அகிலன், சுதா பாமா மற்றும் உற்றார், உறவினர்கள் அத்தியடி விநாயகன் அருள் பெற்று பல்கலையும் கற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தபாற் கந்தோர் லேன்,
கோப்பாய்.

---


**1987-ம் ஆண்டுக்கு**

**ஆனந்தா திருக்குறட் கலண்டர்**

இம்முறை நல்ல வெள்ளைக் கடதாசியில் சிவப்பு மையினால் அழகுற அச்சிடப்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம், கொக்குவில் சோதிட பரிபாலனமடம்

பிரம்மஸ்ரீ இரகுநாதையர்

வாக்கிய பஞ்சாங்கக் குறிப்புகளும், அரச வங்கி வர்த்தக விடுமுறைகளும், கோயில் தினங்களும், பெரியார் நினைவு தினங்களும் குறிக்கப்பெற்றுள்ளன.

எல்லா அம்சங்களும் அடங்கிய ஒரு சிறப்புக் கலண்டர் இது!

இப்பொழுது விற்பனையாகிறது!

தொகையாக வேண்டுவோர் உடனே தொடர்பு கொள்க:

**ஆனந்தா புத்தகசாலை**
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22348


---

# அரசியல் வீழ்ச்சியை நோக்கி நிக்ஸனின் பாதையில் றேகன்

ஈரானுக்கான அமெரிக்க ஆயுத விற்பனை தொடர்பாகவும் அதனால் கிடைத்த இலாபம் நிக்கரகுவா, அரசாங்க எதிர்ப்பு வலதுசாரிக் கிளர்ச்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது தொடர்பாகவும் வாட்டர் கேட் பாணியிலான சுதந்திர விசாரணை ஒன்று நடத்தப்படும்

அமெரிக்க அதிபர் றொனல்ட் றேகன் மூன்று தினங்களுக்கு முன்னர் டெலிவிஷனில் தோன்றி இது பற்றி அறிவித்தார்.

இந்த விவகாரம் அம்பலத்துக்கு வந்த மூன்று வார காலத்தில் அதிபர் றேகன் இரண்டாவது தடவை டெலிவிஷனில் தோன்றி இந்த விசாரணை பற்றி அமெரிக்க மக்களுக்குத் தெரிவித்தார்.

வாட்டர் கேட் விவகாரத்தின் பின்னர் அமெரிக்காவில் பெரும் அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ள ஈரான் விவகாரம் றேகனின் அதிபர் பதவிக்கே உலை வைக்கும் அளவுக்கு சூடு பிடித்துள்ளது

ஈரான் விவகாரம் தொடர்பாக விசாரிப்பதற்காக மூன்று நீதியரசர்களைக் கொண்ட வாஷிங்டன் உயர் நீதிமன்றம் விசாரணையாளர் ஒருவரை நியமிக்கும்.

விசாரணை முடிவில் அதிபர் றேகன் குற்றவாளியாகக் காணப்பட்டால் அமெரிக்க நாடாளுமன்றத்தில் பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் கொண்டு வரப்படும்.

''வாட்டர் கேட்'' ஊழல் தொடர்பாகவும் இதே போன்ற விசாரணையே அப்போதைய அதிபர் றிச்சட் நிக்ஸன் மீது நடத்தப்பட்டது

1973 ஆம் ஆண்டு நடந்த விசாரணை முடிவில் நிக்ஸன் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

அமெரிக்க நாடாளுமன்றம் அவருக்கு எதிரான தீர்மானத்தை கொண்டுவர இருந்த சமயம் அவர் 1974 இல் பதவியில் இருந்து விலகிக் கொண்டார்.

### செல்வாக்கு சரிந்தது

ஈரான் ஊழல் விவகாரம் அம்பலத்துக்கு வந்ததை அடுத்து அதிபர் றேகனின் செல்வாக்கு பெரும் அளவு சரிந்து விட்டது

ஜோன் எப் கென்னடியின் பின்னர் செல்வாக்குள்ள அதிபராகக் கருதப்பட்ட றேகன் மீதான நம்பிக்கை பெரும் அளவு குறைந்து விட்டது.

அமெரிக்காவில் சமீபத்தில் எடுக்கப்பட்ட பொதுசன அபிப்பிராய வாக்குக் கணிப்புகள் இதனைத் தெரிவிக்கின்றன.

இந்த விவகாரம் அம்பலத்துக்கு வந்த பின்னர் இருவருடைய பதவி

**உலக உலா**
**என். பி. சிலன்**

கள் பறிபோயின

ஒருவர் தேசிய பாதுகாப்பு உயர் அதிகாரி ஒலிவர் நோர்த்.

இவரை அதிபர் றேகன் பதவி நீக்கம் செய்துள்ளார்.

ஈரானுக்கான ஆயுத விற்பனைப் பணத்தின் ஒரு பகுதி நிக்கரகுவா அரசாங்க எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்களுக்கு வழங்கப்பட்டது தொடர்பான சகல விடயங்களையும் கையாண்டவர் ஒலிவர் நோர்த் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒலிவர் நோர்த் பதவி நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து அதிபர் றேகனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் பொய்ண்ட்டெக்சர் தாமாகவே பதவியில் இருந்து ராஜினாமாச் செய்து கொண்டார்.

ஜோன் பொய்ண்ட்டெக்சரின் இடத்துக்கு முன்னாள் பாதுகாப்பு ... அமெரிக்க ... அதிகாரியும் ...

மான பிராங்கார் லுக்கி (56 வயது) நியமிக்கப்பட்டுள்ளார்.

றேகனின் ஆறு வருட பதவிக் காலத்தில் இவர் ஐந்தாவது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆவார்.

இந்தப் பதவி மாற்றங்கள் அமெரிக்காவின் பாதுகாப்பு விவகாரங்களில் இருந்து வரும் குறைபாடுகளையே காட்டுகின்றன என்று சொல்லப்படுகிறது

### றேகனும் விசாரிக்கப்படுவார்

தேசிய பாதுகாப்பு கவுன்சில் பற்றி விசாரணை நடத்துவதற்காக அதிபர் றேகன் மூவர் கமிட்டி ஒன்றையும் புறம்பாக நியமித்துள்ளார்.

இந்த மூவர் கமிட்டி றேகனையும் விசாரணை செய்யும் என்று தற்போது செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈரான் ஊழல் விவகாரம் தொடர்பாக அமெரிக்க சட்டமா அதிபர் மெசி கடந்த சில நாட்களாக விசாரணை நடத்தி வந்தார்.

வாட்டர் கேட் ஊழல் பாணியிலான விசாரணை ஒன்றை நடத்துவதற்குப் போதுமான ஆதாரங்கள் இருப்பதாக சட்டமா அதிபர் தெரிவித்ததை அடுத்தே அதிபர் றேகன் 3 தினங்களுக்கு முன்னர் டெலிவிஷனில் தோன்றி இது சம்பந்தமான அறிவிப்பை வெளியிட்டார்.

இஸ்ரவேல் மூலம் ஈரானுக்கு ஆயுதங்களை விற்றது மூலம் 3 கோடி டாலர் பணம் ஈரானிடம் இருந்து பெறப்பட்டதாக அமெரிக்க சட்டமா அதிபர் மெசி விசாரணை முடிவில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

இந்தப் பணத்தில் ஆயுதத்துக்கான உண்மையான பெறுமதி 1 கோடியே 20 லட்சம் டாலர் ஆகும்.

மிகுதியான ... பணமே சுவிஸ் வங்கி ... அரசாங்க எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்களிடம் சேர்க்கப்பட்டுள்ளது

### ஆப்கானிஸ்தான் அங்கோலா

அமெரிக்க ஆயுதங்களுக்காக ஈரானிடம் இருந்து பெறப்பட்ட பெரும் தொகையான பணத்தில் ஒரு சிறு பகுதியே நிக்கரகுவா அரச எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்களுக்குப் போய்ச் சேர்ந்திருப்பதாக ''நியூ யோர்க் டைம்ஸ்'' தெரிவிக்கிறது. பெருந்தொகை பணம் ஆப்கானிஸ்தான், அங்கோலா கிளர்ச்சியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாக இந்தப்

(8ஆம் பக்கம் பார்க்க)

---


**யாழ் லியோ கழகத்தினரால்**

நடத்தப்படும்

**வாழ்த்து மடல்கள் வரையும் போட்டி**

இப்போட்டி வயதெல்லையை அடிப்படையாக வைத்து மூன்று பிரிவுகளாக யாழ். லியோ கழகத்தினரால் நடத்தப்பட உள்ளது இப்போட்டியின் முக்கிய விதிமுறைகளாவன:-

1. தைப்பொங்கல் அல்லது கிறிஸ்மஸ் அல்லது புது வருட வாழ்த்துக்களையே வரைதல் வேண்டும்.

இது வழமையான மடல்களைப்போல் முன்பக்கத்தில் படமும் உள் பக்கத்தில் வாழ்த்து வரிகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

2. வாழ்த்து மடல்களின் அளவு வயதெல்லைக்கேற்றவாறு வேறுபடும்.

12 வயதிற்குட்பட்டவர்கள் — 15cm. X 12cm. மட்டை
12 – 22 வயதெல்லை — 16cm. X 13cm. மட்டை
22 – 27 வயதெல்லை — 20½cm. X 14cm. மட்டை

மேற்படி மட்டைகள் மாத்திரமே எம்மால் வழங்கப்படும்:

3. இப்போட்டிக்குக் கொடுக்கப்படும் நேர அளவு இரண்டு மணித்தியாலங்கள் மட்டுமே.

இப்போட்டிக்கான அனுமதிக் கட்டணம் ரூபா 2.00 மட்டுமே. விண்ணப்பதாரிகள் தமது பெயர், முகவரி, வயது, பாடசாலையில் படிப்பவராயின் பாடசாலையின் பெயர் ஆகிய விவரங்களை ஒரு தாளில் எழுதி

'யாழ் லியோ கழகம்'. 101. பலாலி வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு 10-12-1986இற்கு முன்பாக அனுப்பிவைக்கவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகரிகம் திரும்புகிறது

ஆண், பெண் அணியும் உடைகளின் நாகரிகம் மீண்டும் தற்போது பழமைக்கு திரும்புகிறது. 30 வருடங்களுக்கு முன்னைய படங்களை பார்க்கும் போது தற்காலப் படம்போல உள்ளன.

நகைகள் கூட மீண்டும் பழைய நாகரிகத்திற்கே போய்விட்டன.

இங்கிலாந்தில் பழைய உடுப்புக்களை பவுத்திரமாக வைத்திருந்த பலர் அதை மீண்டும் இப்போது நாகரீக உடையாக அணிகின்றனர்.

நாகரிகம் இப்படியே பின் நோக்கிப் போய் ஆதிவாசிகள் போல் இலை குழை அணியும் நிலைக்கு வராது விட்டால் சரி என்று எனது நண்பர் கூறுகிறார்.

# அமெரிக்க ஜனாதிபதி கொள்ளை அடிக்கிறார்!

அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி றேகன், முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டர் வங்கிக் கொள்ளைகளில் சம்பந்தப்பட்டதாக அமெரிக்கப் பத்திரிகைகள் அடிக்கடி செய்திகள் வெளியிட்டு வருகின்றன. என்ன? இது பெரிய ஆச்சரியமாக உள்ளதே என்று நினைக்கிறீர்கள் போலத் தெரிகிறதே!

அமெரிக்க நகரமான ஒஹையோவில் புதுமையான முறையில் வங்கிக் கொள்ளைகள் நடைபெறுகின்றன.

கொள்ளையர்கள் தங்கள் முகங்களை பிரபலமானவர்களின் உருவ அமைப்புடைய முகமூடிகளை மாட்டிக்கொண்டு கொள்ளையடிக்கிறார்கள்.

அமெரிக்க ஜனாதிபதிகள் றேகன், காட்டர் ஆகியோரைப் போல இவர்கள் முகமூடி அணிந்து கொள்ளையடிப்பதை வங்கிகளிலுள்ள இரகசிய கமராக்கள் படம் பிடித்து விடுகின்றன

மறுநாள் தினசரிகளில் ஜனாதிபதிகள் கொள்ளையடித்ததாக தலையங்கம் போட்டு; படத்தையும் போட்டு பிரசுரிக்கிறார்கள்!

## விடுமுறை பலநாள்

பல நாடுகளிலும் ஞாயிற்றுக்கிழமையே வாராந்த விடுமுறை நாளாக உள்ளது.

ஆனால் கிரீஸ் நாட்டில் திங்கட்கிழமையிலும்; சிரியாவில் புதனிலும்; எகிப்தில் வியாழனிலும்; பாரசீகத்தில் செவ்வாயிலும்; அரபுநாடுகளில் வெள்ளியிலும்; இஸ்ரேலில் சனியிலும் வாராந்த விடுமுறை வழங்கப்படுகிறது

# இந்தியா இனப்பிரச்சினையை தீர்த்து வைக்கும் என நம்பலாமா?

தமிழினத்தை அழித்தொழிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இலங்கையரசு, இந்திய அரசோடு தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், சூழ்நிலையைத் தனக்குச்

## ராஜீவின் அணுகுமுறை பக்கம் சார்கிறது!

சாதகமாக மாற்றி, இன ஒழிப்பைச் செயற்படுத்துவதில் வெற்றி பெற்று வருகின்றது. இந்திய அரசுக்குக் கொடுக்கும் வாக்குறுதிகளை மீறுவதும் இலங்கை அரசுக்குக் கைவந்த கலை.

இலங்கையில் வாழ்ந்த இந்திய வம்சாவழித் தமிழர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டபின், அவர்களுக்கெனத் தனியான வாக்காளர் பட்டியல், ஒன்றைத் தயாரித்து, அவ்வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் நடத்தி, அவர்களுக்கு நாடாளுமன்றத்தில்

-மட்டுவில் ஆ. நடராசா-

நான்கு உறுப்பினர் பதவிகளைக் கொடுக்கும் ஒப்பந்தம் ஒன்று இரு அரசுகளுக்கிடையிலுஞ் செய்யப்பட்டது. அவ்வொப்பந்தப்படி வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படவில்லை! தேர்தல் நடத்தப்படவில்லை; நாடாளுமன்றப் பிரதிநிதித்துவ உரிமை பறிக்கப்பட்ட அம்மக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை.

இம்மக்கள் தொடர்பாக சிறீமாவோ சாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்டது ஒப்பந்தஞ் செய்யப்பட்டபோது சம்பந்தப்பட்ட மக்களின் கருத்துக்கு எதுவித மதிப்பும் அளிக்கப்படவில்லை. வர்த்தகப் பொருள்களைக் கொள்வனவு செய்வது போல, நாடற்றவராக்கப்பட்ட மக்களின் ஒரு பகுதியினரை ஏற்றுக் கொள்ள இந்திய அரசு சம்மதித்து இலங்கை அரசுடன் ஒப்பந்தஞ் செய்து கொண்டது. ஒப்பந்த மூலம் இலங்கையில்

> இனப்பிரச்சினை சம்பந்தமான கட்டுரையாளரின் ஒரு கண்ணோட்டம் இது கருத்துக்கள் அவரின் சொந்தக் கருத்துக்களே.
> —பிரதம ஆசிரியர்.

தமிழரைச் சிறுபான்மையினராக்கும் முயற்சியில் இலங்கை அரசு வெற்றி பெற்றது. அந்த ஒப்பந்தங்கூட உரிய நேரத்திற் செயற்படுத்தப்படவில்லை. அதனால் நாடற்ற மக்களின் பிரச்சினை இன்றும் தீர்க்கப்படாமலே இருக்கிறது.

பூகோளரீதியில் கச்சதீவுப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட நாடுகள் இலங்கையும் தமிழ் நாடும். இருந்தும் தமிழ் நாடு தனிநாடாக இல்லாமல், இந்திய மாநிலங்களில் ஒன்றாக இருந்த காரணத்தால், தமிழ் நாட்டின் கருத்துக்கு எவ்வித மதிப்புங் கொடுக்காமல், இந்திய அரசு கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்தது.

இலங்கையில் இப்போது உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு இந்தியா நடுவர் என்ற முறையிற் தலையிட்டது. இந்தியாவை ஒருபோது கண்டிப்பதும் இன்னொரு போது வரவேற்பதுமாக இலங்கைஅரசு இரட்டை வேடம் போட்டு வருகிறது முதல் நாள் சமரசத் தீர்வு பற்றி இந்திய அரசோடு பேச்சு நடத்தும் இலங்கையரசு மறுநாள் மறைமுகமாகி இஸ்ரவேலுடன் இராணுவத் தீர்வு பற்றி இரகசியப் பேச்சு நடத்துகிறது.

அண்மையில் பெங்களூரில் நடைபெற்ற சார்க் மாநாட்டின் போது இலங்கை இந்தியத் தலைவர்கள் இலங்கையின் இனப்பிரச்சினை பற்றிப் பேச்சு நடத்தினர்கள். மாநாட்டின் முடிவில் இந்தியப் பிரதமர் ராஜீவ் செய்தியாளர் மாநாடு நடத்தினர். அப்போது இலங்கை இனப்பிரச்சினை தொடர்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## கடல் கடந்த கடிதம்

### மீகாமன் இல்லா மரக்கலமா?

தம்பி,

பல்வேறு தலைமைகளால் நமது இலட்சியப் பயணம் தடைபடுகிறது என எழுதியிருந்தாய்! உண்மைதான்! பல்வேறு நாடுகளிலும் இதே நிலைமைகள் இருந்ததும் உண்மைதான். ஆனால் நெருக்கடி நிலைமைகள் உச்சக்கட்டம் அடைந்தபோதெல்லாம் மக்கள் ஓரணியில் திரண்டிருந்ததையும் வரலாற்றில் நாம் படிக்கவில்லையா?

முப்பது ஆண்டுகட்கு மேலாகத் தமிழர் வெவ்வேறு அணிகளில் இருந்து கண்ட பலன் என்ன? ஐக்கியம், நம்பி வாழ்வோம், அகிம்சை வழி, அன்பு வழி, வர்க்க ஒற்றுமை எனப் பல சித்தாந்த மாயைகளிலே சிக்குண்டோம்! நிலம் பறிபோனது; உரிமைகள் பறிபோயின!

பாராளுமன்ற விவாதங்களிலே தமிழர் வைத்த வாதங்களுக்கு, ஆளும் கட்சியைச் சேர்ந்த தமிழர் மூலமே பிரதிவாதம் செய்யப்பட்ட சாணக்கியத்தை, தம்பி, நாம் மறந்து விடலாமா? பிரித்தும், பிரிந்தாரைப் பேணியும் ஆளும் வர்க்கம் ஆட்சியிலே சுகம் கண்டதை அதற்குள் வாகவா மறக்கமுடியும்?

குறிப்பிட்ட சில இலக்குகளை அடையும் மட்டுமாயினும் பேதங்களை மறந்து, சித்தாந்தங்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு வல்லவன் ஒருகீழ் செயற்படுதலே அவசியம்! மிக அவசியம்!!

மரக்கலத்திலே பயணம் செய்ய மக்கள் ஏறிவிட்டால் போதுமா? அதனைச் செலுத்த மீகாமன் (மாலுமி) வேண்டாமா? ஆளுக்கொரு பக்கம் தண்டை வலித்தால் நடுக்கடலிலே தத்தளிக்க வேண்டியதுதான்.

"மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது!"— இது ஔவையின் கொன்றைவேந்தன் தரும் அனுபவ வாக்கியம்! நல்ல தலைவன் கீழ் தம்பி, நாம் ஒன்றுபட வேண்டிய காலமிது!

அன்புடன்
—சிவா—

## பஞ்சாமிர்தம் பலாசுஅமிர்தம்

### பன்றி பரப்பும் மூளைக் காய்ச்சல்

பன்றி வளர்ப்பு உலகம் முழுவதும் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது.

பயங்கரத் தொற்று நோய்கள் பரவ பன்றி வளர்ப்புத்தான் காரணம் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பன்றிகளினால் தான் மூளைக்காய்ச்சல் பரவுவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வட இந்தியாவில் ஹூப்ளி- தர்வல் மாநகர சபை வளர்ப்புப் பன்றிகளை அழிக்கும் இயக்கத்தைத் தொடங்கியது

பன்றி வளர்ப்பில் ஈடுபடும் நால்வர் இதனை எதிர்த்தனர்.

நோய்க்கிருமிகளை பன்றிகள் பரப்புகின்றன - இது மாநகராட்சியின் வாதம்

பன்றி வளர்ப்புத்தான் எமக்கு 'சோறு' போடுகிறது — இது வளர்ப்போரின் வாதம்

"பன்றி வளர்ப்போர் முன் அனுமதி பெற வேண்டும். 'பன்றி வளர்ப்பு வலயம்' ஒன்றினுள்தான் பன்றிகள் வளர்க்கப்பட வேண்டும்—" இது இருதரப்பையும் விசாரித்த முன்சிப் உத்தரவு.

கவனம்! யாழ்ப்பாணத்திலும் இப்போது பன்றிகளின் தொல்லை அதிகரித்துவிட்டது.

### திருமணச் சோடி செருப்புச் சோடியே!

திருமணம் பற்றி பலர் பலவிதமாகச் சொல்வார்கள்

இருமனம் கலந்தால் திருமணம் என்பர் சிலர்.

மனைவி அமைவது எல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பர் சிலர்.

திருமணம் செருப்புச் சோடி போன்றது என்கிறார் பிரபல ஹிந்தி நடிகையான ஷர்மிளா டாகூர்.

'செருப்பு ஸ்டைலாக மட்டும் இருக்கக் கூடாது. அளவாக இருக்க வேண்டும். இல்லாவிடில் நொண்டி நடக்க நேரிடும்; அல்லது காலில் 'ஆணி' உருவாகிவிடும்;- என்றும் சொல்கிறார் ஷர்மிளா டாகூர்.

பிரபல கிரிக்கட் வீரர் பட்டோடி நவாப்பின் மனைவிதான் இந்த ஷர்மிளா டாகூர்.

### அழாதே! அழாதே!

நியூயோர்க்கில் நடைபெற்ற அழும் போட்டி ஒன்றில் வெரீனே சென்டுஸ்கி என்பவர் வென்றுள்ளார்.

இவர் மூன்றரை மணி நேரம் தொடர்ந்து அழுது சாதனை செய்தார்.




## தமிழ் தேசிய தனித்துவத்துக்கு கைலாசபதியின் பங்களிப்பு

சுதந்திர இயக்கத்துக்கு தமது பாரம்பரியத்தைக் கட்டிக் காத்து தன்னுணர்வு பெற்ற மக்களால்தான் பூரண பங்களிப்புச்செய்ய முடியும். அந்த வகையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இதற்குக் காரணமாக விளங்குபவர் ஆறுமுகநாவலர். ஈழத்து இலக்கியத்தைப் பொறுத்தவரை மட்டுமன்றி தமிழ் இலக்கியத்தின் தற்காலத்துவத்திற்கு வழிவகுத்தவரும் இவரே.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியை பொறுத்தவரை தற்கால இலக்கிய முயற்சிகள் காலத்துக்குக் காலம் முகிழ்ந்தனவாயினும் அது சரியான ஒரு நெறிப்படுத்தலின்றி முழுமை பெறவில்லை. தவிர பாரம்பரிய தமிழ் அறிஞர்கள் சங்க இலக்கியங்கள், சங்கம் மருவிய கால இலக்கியங்கள், தமிழ் வல்லரசுகள் காலத்துப் பேரிலக்கியங்கள், பல்லவர் காலத்துடன் எழுந்த பக்தி இலக்கியங்கள் ஆகியவற்றையே போற்றினர்.

சிறுகதை, தற்காலக் கவிதை, குறுங்கதைகள், நெடுங்கதைகள் ஆகியவற்றைப் புறக்கணித்தனர். இதனால் புதிய இலக்கிய முயற்சிகளின் படைப்பாளிகளும் பின் தள்ளப்பட்டு மறைக்கப்பட்டனர்.

இந்த மந்தநிலை இருந்த பொழுதுதான் பேராசிரியர் கைலாசபதி 'தினகரன்' ஆசிரியர் குழுவிற் சேர்ந்தார். தினகரன் பத்திரிகையின் வாரப் பதிப்பு ஆசிரியராகச் சேர்ந்த கைலாசபதி பின்பு பொறுப்பாசிரியராக உயர்ந்தார்.

தினகரன் பத்திரிகையின் போக்கு பெரும் மாற்றம் பெற்றது. தினகரனில் அதற்கு முன்பு பாரம்பரிய இலக்கியங்களைப் பற்றிய கட்டுரைகளே வெளிவந்தன.

உரையாக, விமர்சனமாக, நயப்புகளாக கட்டுரைகள் வெளியாகின.

> தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு தனித்துவமான பங்களிப்புச் செய்த திரு. கைலாசபதியின் நான்காவது மறைவு தினம் இன்றாகும். அவரது ஞாபகார்த்தமாக இந்தக் கட்டுரை இங்கே பிரசுரமாகின்றது.

வெளிவந்த சிறுகதைகள் கூட தமிழ் நாட்டுப்பாணியில் அதன் பின்னணியில் அதன் மொழிநடையில் எழுதப்பட்டன.

கைலாசபதி ஆசிரியராய் பொறுப்பேற்றபின் இலங்கைச் சூழலும் பேச்சுத் தமிழ் நடையும் சிறுகதைகளில் இடம் பெறலாயின.

இதன் பின்னணியில் இலங்கைச் சூழலையும் இலங்கைத் தமிழர் பேச்சுத் தமிழ் நடையினையும் மையமாக வைத்து படைப்புகள் வெளிவரத் துவங்கின.

ஆ. தேவராசன்

பல இளம் எழுத்தாளர்கள் இந்த வாய்ப்பின் மூலம் அரங்கிற்கு வந்தனர். குறுங்கதைகள், நெடுங்கதைகளைப் பொறுத்தவரையிலும் இதுவே நிலை. சில நெடுங்கதைகள் தினகரனில் தொடர் கதைகளாக வெளிவந்தன.

இலங்கையின் தனித்துவமான நவீன இலக்கிய சகாப்தம் உருவாக்கப்பட்டது. மரகதம், மல்லிகை, வசந்தம் முதலான பல புதிய நோக்குடைய சஞ்சிகைகளும் இந்தப்பணியின் ஈடேற்றத்துக்காகத் தோற்றுவிக்கப்பட்டன.

ஆக, கூட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து கைலாசபதியின் முயற்சி தனி மனித முயற்சியாகத் தொடங்கி, ஒரு இயக்கமாக மாறி, ஒரு புதிய சகாப்தத்தையே தோற்றுவித்திருக்கிறது என்பதை எந்த விமர்சகனும் மறுத்துவிட முடியாது. இதன் தோற்றமும் தாக்கமும் வெறுமனே இலக்கிய உலகோடு நின்றுவிடவில்லை. அப்படி இலக்கியத்துடன் மட்டும்தான் என்று பிரித்துப் பார்ப்பதும் விமர்சிப்பதும் இந்த இலக்கிய எழுச்சியின் முழுமையான வடிவத்தை முடிமறைப்பதாகவே இருக்கும்.

சுருங்கச் சொல்லின் இந்த எழுச்சி இலங்கைத் தமிழர்களுடைய தேசிய உணர்வுகளுக்கும் தனித்துவத்துக்கும் காத்திரமான உரமாக மாறியுள்ளது.

கைலாசின் புதுமை நோக்கு பழமையிலிருந்து துண்டிக்கப்பட்ட முன் தொடர்ச்சியில்லாத வெற்றுப் புதுமையல்ல. கைலாசபதி இலங்கைத் தமிழரின் பாரம்பரியத்தை வேரூன்றி ஊன்றிக் கொண்ட யதார்த்தமான புதுமை நோக்காகும். கைலாசபதி தொடர்ச்சியாக சிறப்பாக 19ஆம் நூற்றாண்டு இலக்கியப் பணிகளின்— அதாவது அந்நிய ஆட்சிக்குப்பின் எழுந்த இலக்கியப் பணிகளையும் துருவி ஆராய்ந்து அவற்றினுள்ள தற்காலப் போக்கிற்கான அடித்தளங்களையும் தனித்துவ நோக்குகளையும் போக்குகளையும் வலியுறுத்தி வந்திருக்கி

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் உள்ள எல்லைப்படைகளுக்கு மன்னன் சங்கிலியன் உஷார் உத்தரவு

நல்லூர் கோட்டையில் நந்திக்கொடி வானளாவி பட்டொளி வீசிப் பறக்க - நிலமும் ஜெயபேரிகை முழங்குவதும் ஓய்வதுமாகவிருக்கிறது.

கொடும் பகைவர்கள் திண்டாடி மடிந்ததைக் கொண்டாடி முடிவதற்கு ஒரு நாள் போதுமா? வெற்றிவிழா கொண்டாடும் வரை ஜெயபேரிகை முழங்க வேண்டுமென்பது மன்னனின் உத்தரவு!

தீவின் தென்திசையில் கோட்டைக்கோட்டாம் சிங்கள நாடு பறங்கியரிடம் தோற்றுப்போய் ஆண்டாண்டு திறை செலுத்தி வரும்போது, அதே பறங்கியரை செருக்களத்தில் வெற்றிகொண்டு வீழ்ச்சியுறச் செய்த யாழ்ப்பாண இராச்சியம் பேரிகை ஒலித்து குதூகலிப்புக் கொள்ளாமலிருக்குமா?

இராச்சியத்தின் எண் திசைகளிலும் முரசறிவிப்போர் மன்னனின் வெற்றிச் செய்தியை முரசம் மலர அறிவிப்புச் செய்கின்றனர். (அக்காலங்களில் தூர இடங்களுக்குச் சென்று முரசறிவிப்புச் செய்வதெனில் கொட்டு முரசுகளை குதிரைகளில் கட்டியெடுத்துச் சென்று முரசறிவிப்பது வழக்கம். பேரிகை முழங்குவோரும் முரசறிவிப்போரும் நல்லூர் அரண்மனைக்குச் சமீபமாக தம் குடியிருப்புக்களைக் கொண்டிருந்தனர் பேரிகை என்பது யுத்த வாத்தியமாகும்.)

சங்கிலி மன்னனின் வரலாறு காணாத பெரும் வெற்றியால் நாட்டு மக்கள் இன்ப வெள்ளத்தில் மிதக்க நாட்டு மந்திரியோ துன்ப வெள்ளத்தில் அமிழ்ந்து கிடக்கிறான் தன்னுடு வென்றகளை துக்கிக்கும் மந்திரியை எத்திக்கும் காண முடியுமா? வெள்ளையரின் களிமண்கோட்டை தரைமட்டமாகியது போல் தனது கற்பனைக்கோட்டையும் தரைமட்டமாகியதைப்பிட்டுக் கலங்கிய மந்திரி பரநிருபசிங்கன் மன்னனிடம் சென்று உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பது போல் கள்ளத்தனம் செய்துவிட்டுத் தன் மாளிகைக்குத் திரும்புகிறான்.

வெள்ளையருடன் மன்னன் தொடுத்த மானப் போர் முடிவுற்று விட்டாலும், மன்னனுடன் மந்திரி தொடுத்த மனப் போர் இன்னும் முடிவடைந்தவிடவில்லை!

தனக்குச் சேர வேண்டிய அரசுரிமையை தன் தம்பியான சங்கிலி அபகரித்து விட்டானென்பது அவனது திராத மனக்குறை! அதனை கறைபடித்த வரலாறு படைத்து அதில் கதாநாயகன் ஆவதற்குத் துடிக்கிறான் மந்திரி ஆனால் இதுவரை எதுவும் முடியாமல் போய் விட்டதே? காக்கை வன்

## பறங்கியர் தரை மூலம் வராது தடுப்பதற்கு அந்த முன்னேற்பாடு

னியனுக்கு இரகசியத் தூது அனுப்பிவிட்டு காத்துக் கிடக்கிறான் அவன்! மந்திரியின் அங்கலாய்ப்பு அவ்வாறிருக்க...

வெள்ளையரை வெம்போரிலே வென்ற வெற்றி வேந்தனும் சங்கிலி மன்னன் மேற்கொண்டும் வெள்ளைப் பறங்கியர் கடல் மார்க்கமாக பண்ணைத்துறைக்கு வர எத்தனித்தால் அவர்களை தரையிறங்கவொட்டாமல் கடலிலே நிர்மூலமாக்குவதென திடசங்கற்பம் கொள்கிறான். கோட்டையில் அதற்கான ஆயுதங்களும் யுத்தப் பயிற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன அது மட்டுமன்று...

கோணச் செங்கோல் ஏந்திய கொற்றவனின் சிந்தனை நாலா கோணங்களிலும் திசை திரும்புகிறது!

......'பறங்கியர் கடல் மார்க்கமாக வராமல் தரை மார்க்கமாக வந்தால்... இன்றைய கோட்டைக்காட்டுச் சிங்கள மன்னன் பறங்கியரின் கைப்பொம்மையாகவிருப்பதால் முன்னர் சிங்களப் படைவெ

● ம. க. அ. அந்தனிசில் ●

டுப்பாளர்கள் வன்னி நாட்டினூடாக வந்தது போல் பறங்கியருக்கும் அதே வழியை அவன் காண்பித்துவிட்டால்... அவ்வளவு காத தூரம் பறங்கியர் தரைமார்க்கமாக வருவது சாத்தியப்படக்கூடியதா?......

நிச்சயம் இல்லை!...... அது சாத்தியப்படவும் முடியாது...... அப்படி வந்தாலும் நமது பலம் வாய்ந்த எல்லைக்காவற் படை கடுஞ்சமர் புரியும் ...... அதற்குள் நான் எல்லைக்குப் படை நடத்திச் சென்றுவிட முடியும்......'

இவ்வாறான சிந்தனையில் புலனைச் செலுத்திய சங்கிலி மன்னன் அங்கு வந்து சேர்ந்த மந்திரியிடம் தன் எண்ணங்களைச் சொல்லிவிட்டு தளபதியை அழைத்து எல்லைக்காவற் படைத் தளபதிக்கு ஓலை எழுதச் செய்கிறான்

'தோற்றுப்போன பறங்கியர் கோட்டைக்காட்டிலிருந்து வன்னி நாட்டின் ஊடாக யாழ்ப்பாண இராச்சியத்திற்குள் மீண்டும் ஊடுருவலாம். உஷாராக இருக்கும்படி மன்னனின் கட்டளை— இப்படிக்கு, சேனாதிபதி'

சேனாதிபதியிடம் ஓலையை வாங்கிக் கொண்ட பணங்கினி வன்னி நாட்டு எல்லையை நோக்கி குதிரைமீது விரைகிறது

வன்னிநாடு என்பது வன்னியர் ஆண்டதால் ஏற்பட்ட பெயராகும். அதுவோர் சிற்றரசு நாடு. மன்னையாளத்திற்கு திறை செலுத்தி வந்தது முன்னர் பல பிரிவுகளாக வகுக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வோர் வன்னிமையாலும் அல்லது வன்னிச்சியாலும் ஆளப்பட்டு வந்தது

சேர சோழ பாண்டியர் எவ்வாறு தமக்குள் பொருதிக் கொண்டார்களோ அதே போன்று வன்னி நாடும் யாழ்ப்பாண இராச்சியத்தின் மீதுபலமுறை படையெடுப்புச்செய்துகலகம்விளைவித்திருக்கிறது. சிங்களவர் வன்னி நாட்டைத் தூண்டிவிட்டுப் பின்னால் நின்று கொண்டார்கள். ஆனாலும் வன்னிநாடு யாழ்ப்பாண இராச்சியத்தை எச்சமயமும் வென்றதில்லை!

ஒரு சமயம் யாழ்ப்பாண இராச்சியத்தில் கலகம் விளைவிக்கும்படி வன்னியர்கள் சிங்களவர்களைத் தூண்டிவிட்ட செதியறிந்த யாழ்ப்பாண மன்னன் விரோதய சிங்கையாரியன் கடுஞ்சினம் கொண்டவனாய் வன்னிநாட்டின்மீது படையெடுப்புச் செய்து வன்னியர்களில் ஏழு இருங்களைக் கொல்லையடித்து அவர்களை எச்சரிக்கையும் செய்து நல்லூருக்கு மீண்டான்.

**பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டுமோதிய நல்லூர் அரசு**
**(பகுதி : பன்னிரண்டு- அ)**

பின்னர் விரோதய சிங்கையாரிய மன்னன் மதுரைக்குச் சென்றிருந்ததை அறிந்த வன்னியர்கள் சிங்கள மன்னனிடம் சென்று யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது படையெடுக்க படையுதவி கேட்டதாகவும் விரோதய சிங்கையாரிய மன்னனின் பராக்கிரமத்தையறிந்த சிங்கள மன்னன் வன்னியருக்கு படையுதவி கொடுக்க மறுத்துவிட்டதாகவும் அதனால் துணுக்குற்ற வன்னியர்கள் இவ்விவகாரம் யாழ்ப்பாண மன்னனுக்கு எக்காலத்திலும் தெரிய வந்தால் தாம் பெருந்தண்டனைக்கு உள்ளாக நேரிடுமெனக்கருதி விரோதய சிங்கையாரிய மன்னன் மதுரையிலிருந்து மீண்டதும் பெருந்திரவியங்களை எடுத்துக் கொண்டு நல்லூருக்குச் சென்ற ஏழு வன்னியர்களும் மன்னனைச் சந்தித்து வெகுமதியளித்து. நட்புறவு பாராட்டி மீண்டதாகவும் அதே இரவு சப்ரமஞ்சத்திலே துயில்கொண்ட மன்னன் சடுதியாக இறக்க நேரிட்டதாகவும், மன்னனின் சடுதி மரணம் குறித்துப் பலவாறாகப் பேசிக் கொள்ளப்பட்டதாகவும் சரித்திர ஏடுகள் கூறுகின்றன.

விரோதய சிங்கையாரிய மன்னன் சங்கிலியின் கொள்ளுப்பாட்டனாவான். இவை போர்த்துக்கீசர் இலங்கைத்தீவுக்கு வருமுன் நடந்த நிகழ்வுகள். சுத்த வீரனும், சுதந்திர வீரனுமாகிய பண்டாரவன்னியனின் காலம் ஒல்லாந்தருக்கும் (6 ஆம் பக்கம் பார்க்க(

# அறிஞர் அறிமுகம் கிடைத்து அறிவு அதிகமாய்ப் பரந்தது

தாய் வழியால் தனங்கிளப்பு ஊரையும், தந்தை வழியால் மட்டுவில் என்னும் சந்திரபுரத்தையும் நன்கறிந்த பண்டிதமணி அவர்கள் தமது காவிய பாடசாலைக் குருகுலப் படிப்பால்

## திருநெல்வேலி திருநல்வேலியானது

வண்ணார்பண்ணையையும் நன்கறிந்தவர். இடையில் ஈரப்பலா வளவின் இலக்கிய ரசனைக் கூட்டத்தால் திருநெல்வேலி தெற்குப் பகுதியையும் கண்டவர் ஆசிரியர் பயிற்சிக் காலத்தில் கோப்பாய் இருபாலை முதலான ஊர்களையும் கண்டவர்.

இங்ஙனமாக யாழ்ப்பாணத்துப் பழைய ஊர்கள் பலவற்றைக் கண்ட பண்டிதமணி அவர்கள், சைவாசிரிய கலாசாலையிலே தமிழ்த்துறைப் பேராசிரியராய்ப் பதவியேற்ற காலத்தில் திருநெல்வேலி வடபகுதியையும் கண்டவர்

ஒளிவீசிய நிறுவனம்

திருநெல்வேலி வடபகுதியில் அக்காலத்தில் ஒளிவீசிய நிறுவனம் ஒன்று இந்துவாலிபர் சங்கம் வை. எம். எச். ஏ என்று ஆங்கிலம் அறியாதவர்களும் அம்மன்றத்தையும் அம்மன்றச் சூழலையும், மன்ற அங்கத்தவர் ஆற்றிவந்த பன்முகப் பணிகளையும் நன்கறிந்திருந்தனர்.

முன்னேற்றப் பாதையில் வெற்றிகரமாகப் பீடு நடைநடந்த மன்றம் அது. அதன் உத்தியோகத்தர்கள் உள்ளூர்ப்பணி செய்யவும், கொழும்புக் கிளை மலாய் நாட்டுக் கிளைகளில் ஆங்காங்கே பணிபுரியவும் தெரியப் பெற்றிருந்தனர். உள்ளூர்ப்பணிகள் பலவற்றுள் கூட்டுப்பிரார்த்தனை, சைவத்தமிழ்ச் சொற்பொழிவுகள் முதலியன பெருமனையில் நடைபெற்றன

பண்டிதமணி அவர்கள் அந்தச் சூழலுக்கு வந்தகாலத்தில் சங்கம் பதினெட்டாண்டுகள் கண்டிருந்தது சங்கத்தின் நற்பணிகளைப் பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு சு நடேசபிள்ளை அவர்கள் வெகுவாகப் பாராட்டியிருந்தார்.

சங்கத்தின் ஆரம்ப கர்த்தாக்களுள் ஒருசிலர் வேலுப்பிள்ளை, கந்தையாபிள்ளை, பசுபதி, சுப்பிரமணியம், பொன்னண்ணன் என்னும் பொன்னம்பலம், சண்முகம், சபாரத்தினம், வை சி. சி. குமாரசுவாமி, கதிரவேலு, கந்தையா, சுந்தரம், பொன்னம்லம், சுப்பிரமணியம், சரவணமுத்து, தம்பித்துரை, சிற்றம்பலம், தில்லையம்பலம், இளையதம்பி ஆகியோரும் பிறருமாவர்.

**பண்டிதமணி**
**வரலாறும் காலமும்**

● க. சி. குலரத்தினம் ●

ஊர்காவற்படை

அந்தக்காலத்தில் புகழ் பெற்ற கள்ளர்கூட்டம் ஊர்கள் தோறும் பெருமனையில் கொள்ளையடித்து அட்டூழியங்கள் செய்துவந்த காலத்தில் திருநெல்வேலி இந்துவாலிபசங்கத்தார் ஊர்காவற்படை என்னும் பெயரில் தொண்டு புரிந்து சூழலைக் காப்பாற்றிப் பெரும் பாராட்டுப் பெற்றிருந்தார்கள்

சங்கத்துப் பிரமுகர்களில் ஒருவராய வே எஸ் சுப்பிரமணியம் என்பவர் இந்துக்கல்லூரியில் புகழ்பெற்ற ஆசிரியருள் ஒருவராய வே. எஸ். எஸ் என வழங்கியவர்,

அப்பெருமகனார் பண்டிதமணி அவர்கள் வாழ்ந்த கலாசாலை வீதியில் (6 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்சினையில் ரஷ்யா இந்தியாவுக்கு ஆதரவு

இரண்டு வாரங்களாக சோவியத் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தும் பல பிரமுகர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியும் தாயகம் திரும்பிய நீர்வேலியைச் சேர்ந்த திரு. சி. இராசையா அவர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்

நாம் பார்வையிட்ட இடங்கள் யாவும் அதிமுக்கிய வரலாற்று முக்கியத்துவம் பெற்றவையாக அமைந்திருந்தன நாம் பார்வையிடாத வேறு பல இடங்கள் முக்கியத்துவத்தில் குறைந்

## சோவியத் சென்றவர் தகவல்

தவையல்ல. மேற்கத்திய நாடுகளில் இருப்பவை போலல்லாது நாம் பார்த்தவை ஒரு புதிய சமுதாய அமைப்பையும் அதில் உழைக்கும் மக்களின் வாழ்வு செல்வம் கொழித்துப் பூத்துக் குலுங்குவதைக் காண முடிந்தது

சஞ்சீவிக்காக அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்களும் பதில்களும் வருமாறு:-

கேள்வி: சோவியத் நாடு உழைக்கும் மக்களின் சொர்க்கபூமி என்று கூறுகிறார்களே. அப்படியா?

பதில்: மக்கள் அனைவருமே உழைப்பாளிகள் தான். சுரண்டி வாழும் வர்க்கம் (அதாவது முதலாளித்துவ வர்க்கம்) அங்கு பூண்டோடு களையப்பட்டுவிட்டது மனிதனுக்கு மனிதன் பயந்து வாழ்வதை அங்கு காணவில்லை

தொழிலில்லையே என்று வீதிகளில் அலைந்து திரியும் மனிதர்களைக் காணவில்லை. வாழ வழியில்லை என்று சலிப்பாரில்லை.

எமது நாட்டில் தொலைக்காட்சிப் பெட்டி குளிர் சாதனப்பெட்டி, உயர்ரக வானொலிப்



சி. இராசையா

பெட்டி, தொலைபேசி ஆகிய சாதனங்களை ஒருவர் வைத்திருப்பதென்றால் பணம் படைத்தவராகவே அவர் இருப்பார்.

ஆனால் அந்நாட்டிலோ சாதாரண தொழிலாளி இச்சாதனங்களனைத்தையும் வைத்துப் பாரபட்சமின்றி அனுபவிக்கிறான். அவனின் வீட்டுவாடகைக்கென அவனது சம்பளத்திலிருந்து அறவிடப்படும் 5 சதவீதமான பணத்தில் இச்சாதனங்களின் உபயோகச் செலவுகளும் மின்சாரக் கட்டணமும் அடங்கும்.

கேள்வி: எங்கள் நாட்டில் இன்று நடைபெறும் இனமோதல்கள் அரச பயங்கரவாதம், போன்றவை பற்றி அந்நாட்டவர்களின் அபிப்பிராயம் என்ன? எமது இனப் பிரச்சினைபற்றிப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதா?

பதில்: பலகருத்தரங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுதில் சில சந்தர்ப்பங்களில் அவர்கள் எமது இனப் பிரச்சினை பற்றிக் கேட்டார்கள். விசேடமாக யாழ்ப்பாணத்திலிருந்து எமது தூதுக்குழுவில் அங்கம் வகித்த ஒரு தமிழினத்தைச் சேர்ந்தவனென்ற ரீதியில் என்னிடம் இக்கேள்விகள் கேட்கப்பட்டன

திவிரவாதிகள் பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையில் ஸ்ரீலங்கா அரசின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் நோக்கில் தொழிற்சங்கவாதிகளும் சில மதகுருமார்களும் ஆயுதந் தாங்கித் தமது நியாயமான உரிமைகளுக்காகப் போராடும் போராளிகளும் மற்றும் ஜனநாயக உரிமை கோரும் சகல சக்திகளும் பயங்கரவாதிகளாகக் கருதப்படுகின்றனர். ஆனால் ஆளவந்தோரே பொதுமக்களைக் தாம் கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் மீறி அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதிலும், அவர்களின் உடைமைகளை அழிப்பதிலும் இராணுவத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பயங்கரவாதத்தில் ஈடுபடுகின்றனர் என்பதை விளக்கிக் கூறினேன்.

அரசியல் தீர்வை மேற்கொள்ளும்படி மக்கள் 6ஆம் பக்கம் பார்க்க,

சந்திப்பு: க. கணேஸ்வரராசா

# போதைப்பொருளைப் பாவித்து வாழ்வில் பேதையாகாதீர்!

விஞ்ஞானமானது நேரத்தைக் கட்டுப்படுத்தி சகல வசதிகளையும் சௌகரியத்தையும் ஏற்படுத்தி மனிதனின் வாழ்க்கை சீரான முறையில் அமைய வழிவகுக்கின்ற அதே வேளையில் மனிதனை அழிவுப் பாதையில் இட்டுச் செல்லக் கூடியதாகவும் உள்ளது.

மனிதனின் உடலையும், உணர்ச்சியையும், செயற்பாட்டையும், மனப்பாங்கையும் பாதிக்கக் கூடிய நிலையில்,போதைப் பொருள்களும் புகைத்தலுக்குரிய பொருள்களும் மதுபானங்களும் விஞ்ஞான வாயிலாக கண்டுபிடிக்கப்பட்டு மனித சமுதாயத்தில் கட்டுக் கடங்காத பிரச்சினைகளை உருவாக்கியுள்ளன.

மதுபானங்கள்

மதுபானங்களில் காணப்படும் போதைப் பொருள் எதையில் அற்ககோல் அல்லது எதனோல் ஆகும் பழவகைகள், சாய் திவகைகள் தானியங்கள் ஆகியவற்றிலிருந்தும். தென்னை, பனை, கித்துள் போன்ற மரங்களிலிருந்தும் மதுபானங்கள் தயாரிக்கக் கூடியதாவுள்ளன.

பியர் (Beer) பானத்தால் கனவளவு ரீதியாக 5 வீத அற்ககோலும் சாதாரண உவைன்களில் 10 — 14 விதமும், செறி, போட், வேமவுத் போன்ற உவைன்களில் 14 — 20 விதமும் விஸ்கி, றம், ஜின் போன்றவற்றில் 40 வித அற்ககோலுமுண்டு.

ஒரு நேரத்தில் எடுக்கப்படும் மதுபானத்தின் அளவைக் கொண்டே அதன் தாக்கம் உடலில் ஏற்படும். அத்துடன் ஏற்கனவே பாவித்ததின் காரணமாக ஏற்பட்ட அனுபவம், பாவித்த இடம், சந்தர்ப்பம், உணர்ச்சி, தொழிற்பாடு, சூழல், எப்படிப்பட்ட மக்கள் மத்தியில், ஆகியவற்றைக் கொண்டே உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் மாற்றங்கள் ஏற்படும்

எதனோல் ஆனது உட்கொண்ட பின் குருதியிலுள்ள அளவைப் பொறுத்து தலையிடி, நிதானமற்ற நிலை, சத்தி எடுத்தல், மயக்கநிலை ஆகியன ஏற்படும்

அற்ககோலுடன் வேறு போதைப் பொருள்களை உள்ளெடுத்தால் பல விதமான விபத்துக்கள் ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுமுண்டு கூடியளவு மதுபானம் அருந்துபவர்கள் பசி ஏற்படுதலை இழக்கின்றனர் உயிர்ச்சத்துக்குறைபாடு, வயிற்றில் எரிவு, தோலில் மாற்றங்கள், உறுப்புக்கள் சரியாகத் தொழிற்படாத நிலை, பாலியல் குறைபாடுகள், ஈரல் தாக்கப்படுதல், இதயம் இயங்கும் ஒழுங்கில் குருதிக்கலன்கள் தாக்கப்படுதல் ஆகியன ஏற்படும் இதன் விளைவாக ஞாபகசக்திக்குறைவு அவதானக்குறைவு நிரந்தரமாக ஏற்படலாம்

குருதியில் அற்ககோலின் வீதம் 05 — .1 வரை இருந்தால் நரம்புத் தளர்ச்சி, தடுமாற்றமும் 27 —. 44 வரை இருந்தால் மயக்கமும் .36 — .45 வரை இருந்தால் உணர்ச்சியின்மையும் 45க்கு மேல் இருப்பின் மரணமும் நிச்சயம்.

மிகக் கூடியளவு மதுபானத்தை வருடக்கணக்காக அருந்துபவர்கள் புற்றுநோய், இதயநோய் ஆகியவற்றின் தாக்கத்துக்கு ஆளாகின்றனர். மது அருந்தும் பழக்கத்துடன் புகைத்தலும் சேருமானால் பாதிப்பு [illegible] மது அருந்துதலையும், புகைத்தலையும் பழக்கமாகக் கொண்டவர்கள், சுவாச உறுப்பு, தொண்டை, வாய், உணவுக்குழாய் ஆகியவற்றில் புற்றுநோய், இதயத்திலும் ஈரலிலும் நோய்கள், நரம்பு வியாதி, மூளை வியாதி போன்றவற்றால் பாதிக்கப்பட்டும் இறந்தும் இருக்கின்றனர்.

காரணங்கள்

மதுவை அருந்துவதற்குரிய காரணங்களாக— சமூகக் கட்டங்களை களிப்பாக்கவும், ஓய்வெடுக்கவும்,துயிலவும், சமூக ரீதியான அல்லது உடல் ரீதியான சௌகரியங்களைக் குறைப்பதற்கும், நீர்த்தாகத்தைக் குறைப்பதற்கும், சமிபாட்டைக் கூட்டுவதற்கும், [illegible] லதற்கும், உற்சாகத்தைக் கூட்டுவதற்கும் சுய பொறுப்பிலிருந்து விடுவிக்கவும் ஆகியன சொல்லப்படுகின்றன

புகைத்தல்

சிகரெட் புகையானது பல வாயுக்களையும் நுண்படிவுகளையும் கொண்ட கலவையாகும்.

புகையை உள்ளெடுக்கும் பொழுது 50 விதமானவளவு சுவாச உறுப்புக்களில் படிந்தும், சில நுண்படிவுகள் சுவாசக்குழாயிற் தங்கியுமிருக்கும். இப்புகையானது ஏறத்தாழ 1000 சேர்வைகளைக் கொண்ட சிக்கலான அமைப்பாகும். இப்புகை சற்று அமிலத்தன்மையானது ஆனால் புகையிலைச் சுருட்டுப்புகை காரத்தன்மையானது.

சுருட்டுப்புகை உள்ளெடுப்பது குறைவாகும். எனவே சுருட்டுப்புகைத்தலால் ஏற்படும் அபாயம் சிகரெட் புகைத்தலிலும் பார்க்கக் குறைவாகவுள்ளது

சிகரெட்டின் கூறுகள்

நிக்கொற்றின் — புகையை உள்ளெடுக்கும் பொழுது 90 வீத அளவு உறிஞ்சப்படுவதினால்.இதயம் குருதிக்கலன்கள், சமிபாட்டுக்குழாய், சிறுநீரகம், நரம்புத்தொகுதி ஆகியன தாக்கப்படுகின்றன

தார் போன்ற நுண்படிவுகள்புற்றுநோய்க்குக் காரணமாகவுள்ளன.

எரிவுகள் - சுவாசக் குழாய்களைத் தாக்கக் கூடியவை.

காபனோரொட்சைட்டும் ஆசெனிக்கும் மிகக் குறைந்தளவுள்ளன.

இவை மிகவும் நச்சுத் தன்மையானவை.

அநேக நாடுகளில் நடத்தப்பட்ட விஞ்ஞான ஆய்வுகளின்படி புகைத்தல் உடற் சுகாதாரத்திற்கு மிகக் கேட்டை விளைவிக்கக் கூடியதாகவுள்ளது வாழ்க்கைக் காலத்தைக் குறைத்தல், சுவாச உறுப்புப் புற்றுநோய், கொடிய இருமல்,இதயத்திலும் குருதிக்கலன்களிலும் நோய்கள், வயிற்றில் அல்சர், நாக்கு, தொண்டை, சுவாசக் குழாய், நுரையீரல், பங்கிறியாஸ் போன்றவற்றில் புற்றுநோய் ஆகியன பரிசோதனைகள் மூலம் அறியப்பட்டுள்ளன.

இளைஞர்கள் இதய நோயினால் இறப்பதற்கு அடிப்படைக் காரணம், மிகக்கடினமான முறையில் புகைத்தலேயாகும் புகைத்தலால் ஏற்படும் கொடிய தீமைகளைப் பற்றி இளைஞர்கள் பொதுவாகச் சிந்திப்பதில்லை. நிறை குறைதல், ஓர் புதுவிதமான இருமல் தோன்றி சுவாச உறுப்புக்களைத் தாக்குதல், உடலிலுள்ள சுரப்பிகளைத் தாக்குதல், ஈரல் நுரையீரல் தாக்கப்படுதல் ஆகியன ஏற்படுவதினால் இளைஞர்கள் சுகாதார வாழ்க்கை, சமூக முன்னேற்றம் என்பதை மனதிற் கொண்டு, புகைத்தல் பழக்கத்தைப் படிப்படியாக விடுவது சாலவும் சிறந்ததாகும்.

சில ஆலோசனைகள்

புகைத்தலைக் குறைப்பதற்கு அல்லது முற்றாக ஒழிப்பதற்கு கையாள வேண்டிய முறைகள்:-

பெற்றோரும் ஆசிரியர்களும் பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் புகைகாதிருத்தல்

அதிகாரிகள், தொழில் (6 ஆம் பக்கம் பார்க்க,

சி. எஸ். சுப்பிரமணியம்
(வளர்ந்தோர் கல்வி அதிகாரி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மனதின் சலனம்

இந்த வீட்டிற்கு வந்ததற்குப் பிறகு சென்ற ஒரு வாரமாகத் தான் நான் இரவில் நிம்மதியாகத் தூங்குகிறேன். இப்பொழுதெல்லாம் மனதில் எந்தவித எண்ணங்களோ, கவலைகளோ தோன்றி மனதை அலைக்கழிப்பதில்லை.

இடைக்கிடை ஸ்ரீதரன் மாஸ்டர் அன்றைக்குக் கேட்ட கேள்வி மனதில் உதிக்க, மனது சலனப்படும். இருந்தும் அதை அவ்வளவு பெரிதாக நான் பொருட்படுத்தவில்லை.

என்னில் சிறுவயது முதலே ஒரு குறை - அதைக் குறை என்று சொல்வதை விட வியாதி என்று சொல்வதுதான் பொருந்தும் — நான் கற்பனையில் பெரும் பெரும் மனக்கோட்டைகள் கட்டி மகிழ்வதில் ஒரு இன்பம் கண்டேன். ஆனால் அவையெல்லாம் பொய்த்து விடுகின்ற போது மனது எப்படி உடைகின்றது

இப்படித்தான் சிறு வயதில் பள்ளிக்கூடத்தில் படிக்கின்றபோது, ஒரு முறை அம்மாவுக்கு உடம்புக்கு வந்து விட்டது. அம்மாவை ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தார் அப்பா. நான் தான் அம்மாவுக்குத் துணையாக ஆஸ்பத்திரியில் நின்றேன். அப்போதெல்லாம் அம்மாவைப் பரிசோதிக்கக் காலையும் மாலையும் ஒரு பெண் டாக்டர் வருவார். இளம் வயது தான். அழகான முகம். எப்போ பார்த்தாலும் புன்னகை தவழும் முகம் மற்ற நோயாளிகளை அவர் ஆதரவோடு விசாரிப்பதும், வைத்தியம் செய்வதும் என் மனதைக் கவர்ந்தன

அப்போதே என் கற்பனைக் கோட்டை உருவாகியது நான் இங்கிலீஸ் படித்து, டாக்டர் தொழில் செய்வது போல, என் அம்மாவின் வியாதிக்கு நானே வைத்தியம் செய்வது போல... ஆனால் என் இந்தக் கற்பனைக் கோட்டைகளெல்லாம் அம்மா என்னை என்றைக்குப் பாடசாலைக்குப் போகாதேயென்று மறித்தாரோ அன்றைக்குச் சிதறிச் சிக்கலுண்டு மனது ரணகளமாயிற்று.

கொஞ்ச நாட்களாக எனக்கு மனது என்று ஒன்று இருக்கிறது என்பதைக் கூட என்னால் நம்பமுடியாமல் போய் விட்டது அந்த ஏமாற்றத்தைச் சின்ன வயதில் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை இதே போலத்தான் வீட்டோடு நின்று விட்ட பிறகு கூட, அந்த வீட்டுச் செல்வநாயகியின் கல்யாண நிகழ்ச்சியின் போது கூட, என்னவெல்லாமோ கற்பனைகள் கண்டேன்.

அவள் தன் கணவனுடன் நடத்தும் இல்லற வாழ்வைப் பற்றியும், தங்களிடையே ஏற்படும் ஊடல் நிகழ்ச்சிகளைப் பற்றியும் கூறும் போதெல்லாம், நான் காணாத கற்பனைக் கணவனுடன், சந்தோஷமாக இல்லறம் நடத்துவதுபோல,... பிற்பாடு இதெல்லாம் பொய்த்து குடும்ப வாழ்க்கையே ஒரு விலங்காக அமைந்து விட்டபோது நான் என்




அன்றைய கற்பனைகளையெல்லாம் எண்ணிச் சிந்தித்திருக்கிறேன்

ஆதலால் பட்ட அனுபவங்களைக் கொண்டு இனி நான் கற்பனையில் வாழமாட்டேன்

ஸ்ரீதரன் மாஸ்டர் சொன்ன அந்த மறுமணத்தை சமூகம் அவ்வளவு இலேசில் மதித்து ஏற்றுக்கொள்ளும் என்று என்னால் நம்பமுடியவில்லை. உலகில் மனிதனாகப் பிறந்துவிட்ட எவனும், எந்த நிலையிலும், யாருக்காகவோ பயந்து தான் தன் எண்ணங்களையும் தீர்மானங்களையும் செயல்படுத்துகிறான்

அந்த யாரோ தான் இந்தச் சமூகம் அப்படியில்லாது துணிவோடு, தான் நினைத்தபடி வாழ நினைக்கின்ற ஒரு சிலரை இந்தச் சமூகம் மதிக்காது காறி உமிழ்கின்றது

ஆண்களின் நிலையே இப்படியென்றால் பெண்ணாய்ப் பிறந்துவிட்ட நான்; அதிலும் அப்பா, அம்மா, தங்கச்சி, என்ற பாசச் சூழலிலே சிக்கித்

### அத்தியாயம் நான்கு

தவிக்கின்ற நான், தாய் என்ற பெயரோடு தாலி அறுந்தவள் என்ற அவப்பெயரையும் தாங்கி நிற்கின்ற நான், சமூகத்தின் முன்னால் தலை நிமிர முடியுமா?

எனவே தான் அந்த நிலையையே அகற்றி விட்டு, இனி என் வாழ்க்கையை இந்தச் சிறில் தான், தாமரை இலைத் தண்ணீர் போன்ற உணர்வோடு அமைத்துக் கொள்ளப் போகிறேன் என்ற

> உலகில் மனிதனாகப் பிறந்து விட்ட எவனும்.. எந்த நிலையிலும் யாருக்காகவோ பயந்துதான் தன் எண்ணங்களையும் தீர்மானங்களையும் செயற்படுத்துகிறான்......

வைராக்கியத்தோடு, நெசவு நிலையத்தில் வேலையேற்று இன்றைக்கு ஒரு வாரம் முடிந்து விட்டது.

இப்போது கூட வேலை செய்த களைப்பு எதுவுமின்றி வீட்டிற்குப் புறப்படுகின்றேன். இரை தேடப் புறப்பட்ட பறவை மாலையில் கூட்டிலுள்ள குஞ்சைக் காண எவ்வளவு ஆவலாகப் பறந்து வரும் தெரியுமா? புல்மேயப்போன தாய்ப் பசு பொழுது சாயும் வேளை வீட்டில் கட்டுக் கொடியில் நிற்கின்ற தன் கன்றின் நினைவு வந்த மறுகணமே என்ன வேகத்தோடு வீட்டிற்குப் புறப்படுகிறது?

அந்த நிலை தான் இன்று எனக்குக் கூட. ஏனென்றால் நான் ஒரு தாய்: அதிலும் தகப்பனின் பாசத்தையும் பரிவையும் பெறமுடியாத ஒரு அபலைக் குழந்தையின் தாய், எனக்குத் துடிப்பு இருக்காதா என்ன? நேற்றுக் கூட அவள் யமுனாவும் பிரேமாவும் "ஏன்டி சாந்தி, கிணற்றுக் கட்டில் குழந்தையை வளர்த்துவிட்டு வந்தவள் போல அவசரமாகப் புறப்படுகிறாயே?" என்று கேலி செய்ததை நினைக்க எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது

அவர்களுக்கென்ன, வண்ணப் பட்டாம்பூச்சிகள் மாதிரி ஒரே சிரிப்பும் கும்மாளமும் தான்: வாழ்க்கையின் நெளிவு சுழிவு கஷ்டங்களை எதிர் கொள்ளுகிற சந்தர்ப்பம் கிடைக்காத சிறுசுகள். எனக்குள் சிரித்துக் கொண்டே அவசரமாகப் புறப்படுகிறேன் கடைவீதியைத் தாண்டி அப்பால் போய் விட்ட பிறகு தான் நினைவுக்கு வந்தது. கண்ணன் இரண்டு நாட்களாகப் பலூன் வேண்டுமென்று அடம் பிடிக்கிறான்

அடுத்த வீட்டுப் பிள்ளைகள் வைத்து விளையாடும்போது, அதைப்பார்க்கின்ற எந்தக்குழந்தைக்கும் ஏற்படும் ஆசை தானே? இன்றைக்கும் அவனை ஏமாற்றுவது கூடாது என்ற உணர்வு உறுத்த, திரும்பிக் கடைவீதியை நோக்கி நடக்கிறேன். காலநிலை சீராக இல்லாமல், மழைவரும் போலத் தோன்றுவதால் கடைவீதியில் அந்த மாலை வேளையில் ஒரு பரபரப்புக் காணப்படுகிறது.

விளையாட்டுப்பொருட்கள் விற்கும் கடையொன்றில் இரண்டு பலூன்களை வாங்கிக்கொண்டு நிமிர்ந்தவள் எதிர்பாராத காட்சியைக் கண்டு திகைமிதித்தவள் போன்று திடுக்கிட்டுப் போகிறேன்.

யாரது? அடுத்த புத்தகக்கடையில் நுழைவது யார்? நான் காண்பது கனவா நிஜமா? என்ற சந்தேகத்தில் ஒருமுறை கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு பார்க்கிறேன்

சந்தேகமேயில்லை:

ஒருகணம் இந்தக் கடைவீதி, பொருள்கள் மனிதர்கள் எல்லாம் கண்முன் தட்டாமாலை சுற்றுவதுபோல: என் தங்கை லலிதா தான் அடுத்த கடைக்குள் நுழைகிறாள் கையில் ரீயூஷன் புத்தகங்கள்:

அவள் மட்டும் தனித்துச் சென்றால் நான் ஏன் திடுக்கிடுகிறேன். பக்கத்தில் யாரோ ஒருத்தன்: பணக்காரக் காவாலியாக இருப்பான் போலிருக்கிறது அவன் கையோடு கைகோர்த்துக் கொண்டல்லவா செல்கிறாள் ஏதோ சுவாரஸ்யமாகக் கதைத்துக்கொண்டு சென்றதால் அவளுக்கு என்னைக் காணும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தயாள சிந்தை

ஓர் ஊரில் ஒரு வியாபாரி இருந்தான் அவன் பெயர் ராமசாமி. அவனுக்கு ரவி என்று ஒரு மகன் இருந்தான். அவன் இரக்கமும் நற்குணமும் உடையவன். அவன் வழியில் எப்பொருள் கிடைத்தாலும் விசாரித்துக் கொடுத்து விடுவான்.

ஒரு முறை பாடசாலை விட்டதும் அவன் ஆறுதலாக வீதியால் நடந்து கொண்டிருந்தான். அவன் கண்ணில் ஒரு கடித உறை பட்டது எடுத்துப்பார்த்தான். அதில் ஓர் ஆயிரம் ரூபாத் தாள் காணப்பட்டது

அக்கடித உறையின் மேல் எவ்வித பெயரும் எழுதப்படவில்லை. அவன் அதை எடுத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்று தந்தையிடம் விவரத்தைக் கூறினான்.

தந்தை அவனையும் அழைத்துக்கொண்டு பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பொலிஸ் தலைவருக்கு அதைப்பற்றிக் கூறினார்கள். 'அதன் உரிமையாளர் இப்பொழுது வந்துவிட்டுப் போகின்றார். இதோ இம்முகவரிக்குக் கொண்டு போய்க் கொடுங்கள்' என்று பொலிஸ் தலைவர் கூறினார்

அவர்கள் விடைபெற்றுக்கொண்டு அதன் உரிமையாளரான சிவராமன் வீட்டுக்குச் சென்றனர். சிவராமன் அவர்களது நற்பண்புகளை மெச்சிப் பணத்தைப் பெற்றுக்கொண்டார்.

''ரவிபோல் ஒரு பையனைக் காணமுடியாது. இதோ என் அன்புப் பரிசு!' என ஒரு பொன்னிறப் பேனாவை வழங்கினார். ரவி அவருக்கு நன்றிகூறி அதனைப் பெற்றுக்கொண்டான். ராமசாமியும் ரவியும் விடைபெற்றுக்கொண்டு வீடு திரும்பினர்.

ரவியைப் போலவே நாமும் மற்றவர்களின் பொருள்மேல் ஆசை கொள்ளக்கூடாது. எம்மைப்போல மற்றவரையும் நாம் நினைத்துவாழ வேண்டும்.

நா. ஸ்ரீரங்கன்




## புத்திசாலிகளாக வாழ கூறப்பட்ட புத்திமதி

### கூட்டத்தைப் பிரிந்த குட்டி யானைகள் (பகுதி: 4)

அவை வரட்சிக் காலத்தில் தண்ணீர் இருக்கும் நதிகளும் சகதி நிலமும் உடைய இடத்துக்குச் செல்ல இந்த நதியைக் கடக்க வேண்டும். அந்த இடத்தில்தான் வரட்சிக் காலத்தில் அனைவருக்கும் உணவும் கிடைக்கும். விரைவில் வெயில் கடுமையாகும். மழை பெய்யாது. நீர்க் கிடங்குகள் வரண்டு போகும். அப்பொழுது நீங்கள் எங்கே தண்ணீர் குடிப்பீர்கள்; குளிப்பீர்கள்?

'வரட்சியா? காட்டில் வரட்சி ஏற்படும் என்பது எங்களுக்குத் தெரியாதே' என்றது முதலாவது குட்டியானை.

'எங்களுக்கு எதுவுமே தெரியாது போலிருக்கின்றது' என்றது இரண்டாவது குட்டியானை.

'இல்லை அது சரியில்லை. உங்களுக்குப் பல விஷயங்கள் தெரியும். ஆனால் நீங்கள் இன்னும் சின்னவர்கள். இன்னும் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள்' என்று கூறியது கிழட்டு யானை.

'அங்கே பாருங்கள்!' என்று அது சடுதியாகக் கூறிவிட்டு தூரத்தில் காட்டியது யானைத் தந்தங்கள் நீருக்குமேல்நிற்க யானைகள் அந்த நதிக்கூடாக வரிசையாகச் சென்று கொண்டிருந்தன.

'எமது கூட்டம். எமது கூட்டம்' இரண்டு குட்டி யானைகளும் கத்தின. அவை சந்தோஷ எக்காள ஒலி எழுப்பின.

'எனக்குப் பின்னால் வாருங்கள்' என்று கூறிவிட்டு ஆண்யானை நீருக்குள் சென்றது.

நதியின் மறு கரையை அடைந்ததும் இரண்டு குட்டியானைகளும் ஆண் யானையிடம் கூறின. 'நீங்கள் ஏன் தனியாக இருக்கின்றீர்கள்? எமது கூட்டத்தில் சேர்ந்து கொண்டால் என்ன?'

'இல்லை. எனக்குத் தனிமை பழகி விட்டது. எனக்கு வயது வந்து விட்டது. தனியாக என்னால் வாழமுடியும் உங்களால் முடியாது. இப்பொழுது நீங்கள் உங்களை நீங்களே பார்த்துக்கொண்டு உங்கள் சொந்தக் காலில் நிற்கக் கற்றுக் கொள்ள வேண்டும். கூட்டத்திலுள்ள முதிய யானைகளிடமிருந்து தான் நீங்கள் கற்றுக் கொள்ள முடியும்.

அதற்குப் பிறகு தனியாக வாழ விரும்பினால், அது உங்கள் இஷ்டம்' என்று முதிய யானை கூறியது.

பின் அந்த முதிய யானை ஆற்றங்கரையில் திரும்பி நடந்தது. அப்பொழுது சிறிய காட்டு மிருகங்கள் அனைத்தும் அதற்கு வழிவிட்டு விலகின.

இரண்டு குட்டியானைகளும் கூட்டத்தை நோக்கி ஓடின. முதலில் தாய் யானைகள் தான் அவற்றைக் கண்டன 'எங்கே போயிருந்தீர்கள்? நாங்கள் உங்களைத் தேடினோம், கூப்பிட்டோம், உங்களைப்பற்றிக் கவலைப்பட்டோம். மனிதர் உங்களைப் பிடித்து விட்டார்கள் என்று நினைத்தோம். அல்லது யானைப் பொறியில் விழுந்து விட்டீர்கள் என்று நினைத்தோம்' என அவை கத்தின.

'இல்லை நாம் விலகிச் சென்றோம் நாமே கூட்டமாக இயங்க எமக்கு வயது வந்து விட்டது என்று நினைத்தோம்'

'ஐயோ! இல்லை. இல்லை. இன்னும் இல்லை' என்று தாய் யானைகள் கூறின. அவை குட்டியானைகளின் தோள்களில் சுற்றித் தமது துதிக்கைகளை அன்புடன் போட்டன.

பின்னர் குட்டி யானைகள் வந்து சேர்ந்த இந்த சந்தோஷ தினத்தைக் கொண்டாடு முகமாக முழு யானைக் கூட்டமும் மாங்குழைகளை உலுக்கி அடித்து உண்டன இன்று அவற்றுக்கு மாம்பழ விருந்து!

(மிறியம் ஸ்கிலெயின் ஆங்கிலத்தில் எழுதிய கதையின் தமிழ்மொழியாக்கம்)

(முற்றும்)

வி. சின்னத்தம்பி

## ஞான சஞ்சீவி

### பிரகிருதி தத்துவம்

முந்திய கட்டுரையில் பரப்பிரம்மத்தில் இருந்து பிரகிருதி பிறந்ததெனக் கூறப்பட்டது.

சிருஷ்டிக்குரிய தெய்வாம்சமாகிய சதுர்முக பிரம்மா பிரகிருதி தத்துவத்தையே குறிக்கிறது.

பரபஞ்சத்திலுள்ள ஜீவ கோடிகளும் ஜடப்பொருள்களும் பிரகிருதியின் செயற்பாடுகளின் விளைவுகளே என்று கீதை கூறுகிறது.

சக்தியென்றும் மாயை என்றும் இயற்கை என்றும் விபரிக்கப்படும் பிரகிருதியானது பரப்பிரம்மவின் சக்தியை வெளிப்படுத்தும் அம்சமாக செயற்படுகிறது.

பிரகிருதியே கால தேச, காரணகாரிய தொடர்புகளுக்கு அடிப்படையானது மாற்றங்களை ஏற்படுத்துவதும் தோற்றத் திரிபுகளை உண்டாக்குவதுமான அதன் தன்மைகளால் அது மாயை எனப்படுகிறது.

''கர்ப்பாசயங்கள் எல்லாவற்றிலும் பிறக்கின்ற வடிவங்களுக்குப் பிரகிருதி தாயாகின்றாள் கர்ப்பதானம் செய்யும் தந்தை நான்''

(அத் 14 – சு 4) என்று கீதையில் பகவான் கூறுகின்றார். இச்சுலோகம் பெண்பால் பிரகிருதி தத்துவமாகவும் ஆண்பால் புருஷ தத்துவமாகவும் காரியப்படுவதைக் குறிக்கின்றது பரமாத்மா மூலமாயிருந்து கொண்டு பிரகிருதி மூலம் எல்லாவற்றையும் பரிணமிக்கச் செய்வதையே இது விளக்குகின்றது.

பிரமஞ்சத்தின் இயக்கமானது ஒரு கட்டுப் பாட்டுடன் செயற்படுவதாலும், ஜீவராசிகளும், தாவரங்களும் கனிப் பொருள்களும் ஒழுங்கு முறையான திட்டவட்ட

( 6ஆம் பக்கம் பார்க்க)

- அ. குமரகுரு -

## போராட வாழும் போராளிகள்

## வாழப் போராடும் பொதுமக்கள்

### புகைப்படங்களில் கண்ட இருசாரார்

கடந்த காலங்களில் நடந்த கோலங்களை; சமகால நிகழ்வுகளை; சராசரி மனிதனின் நெகிழ்வுகளை சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சி ஒன்று அண்மையில் நடைபெற்றது.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும், யாழ் பீச் இன் ஹோட்டலிலும் நடைபெற்ற இப்புகைப்படக் கண்காட்சியை, 'தமயந்தி' எனும் புனை பெயரில் புதைந்திருக்கும் ஊர்காவற்றுறை எஸ். விமலராஜ் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த இருபத்து நான்கு வயது இளைஞனின் கை வண்ணத்திலான, கமெரா வர்ணங்கள் பார்ப்போரைப் பரவசத்தில் ஆழ்த்தின.

இவரது படங்களில் ஒருவித கவிதைத் தன்மை காணப்படுகிறது. புகைப்படத் துறையிலும், வீடியோ படப்பிடிப்பிலும் நன்கு பயிற்றப்பட்ட இவர் கவிதைகளும் எழுதக் கூடியவர்.

'சாம்பல் பூத்த மேட்டில்' 'உரத்த இரவுகள்' போன்ற இவரது கவிதைத் தொகுப்புகளிலுள்ள கவிதைகள் இவர் ஒரு முற்போக்கு கருத்துக்களைக் கொண்டவர் என்பதை முரசடிக்கிறது.

போராடுவதற்காக வாழும் போராளிகளையும்; வாழ்வதற்கே போராடும் பொதுமக்களையும் படம் பிடித்துக் காட்டுவது அதை ஊர்ஜிதப்படுத்துகிறது.

பட்டணத்துத் தெருக்களிலே கார் ஓட, கிராமத்து வயல்களிலே ஏர் ஓட வேண்டும் என்பதை எடுத்துக்காட்ட; ''நாங்கள் சேற்றில் இறங்கும் போதுதான் நீங்கள் சோற்றில் கை வைக்க'' எனும் தலைப்பிலான படம் பலரின் பாராட்டுதலையும் பெற்றது.

கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த சுமார் 150 படங்களில் பெரும்பான்மையானவை சிறுபான்மை இனத்தின் சிறப்பையும்; சீரழிவையும் சீர்தூக்கிக் காட்டுவனவாய் அமைந்தன.

''காற்றும் பொய் கவனமாய் கொய்'' எனும் தலைப்பிலான ஒரு சிறுமி தன் தளிர் கரங்களால் பூ கொய்யும் காட்சி- புகைப்படம்; எம்மோடு உள்ளிருக்கும் புல்லுருவிகளை உரித்துக் காட்டுகிறது

எமது மக்களின் இன்றைய சஞ்சலங்களும் சலனங்களும் நிறைந்த மனநிலையை சித்திரிக்கும் வகையிலான 'மனம்' எனும் புகைப்படத்தில் கருமேகக் கூட்டத்தை காட்டுவது கனகச்சிதமாய் உள்ளது.

கடற்கரை, அலைகள், சூரியோதயம், இயற்கை காட்சிகளைப் பார்க்கும் போது, இவை எமது மண்ணிலா உள்ளன என ஆச்சரியப்பட வைக்கிறார்

அதே சமயம் ஷெல் அடியால், சிதறு தேங்காயாய் சிதறிப்போன முகங்களையும், 'இது லெபனான் அல்ல' எனும் (புனொட்டின் மண் மூடை அரண்) படத்தையும் காட்டி இவை [illegible] களே என நினைவுறுத்தி அழ வைக்கிறார்.

விழுந்து வெடியாத ஷெல் ஒன்றை ஒரு சிறுமி தன் கைகளில் ஏந்தி வைத்திருக்கும் படத்திற்கு ''தார்மீகப் பரிசு'' எனத் தலைப்பிட்டது தத்ரூபமாக அமைந்திருந்தது.

வெளியே விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த அவரது புகைப்படங்கள் யாவும் உடனே விற்றுப் போனது எமது மக்களின் கலைப்பற்று இன்னும் அற்றுப் போகவில்லை என்பதையும்; அவரது கமெராவின் கலைத் திறனையும் எடுத்துக் காட்டுகிறது.

விமல்ராஜிடம் அவரது கண்காட்சி பற்றி வினவியபோது;

''இன்றுவரை உலகில் அறிவியற் சாதனைகளாலும், [illegible] மிக்க கலைஞர்களின் பரிசோதனை முயற்சிகளாலும் கலை என்ற வகையில் பாரிய வளர்ச்சி நிலைகளை புகைப்படக்கலை எய்தியுள்ளது.

ஆனால் இன்றும் ஈழத் தமிழர்களிடையில் புகைப்படத்துறை ஒரு கலையாக ஸ்தாபிதமடைந்திருக்கிறது எனக் கூற முடியாது. ஸ்ருடியோக்களுக்குள் முடங்கியுள்ள ஒரு தொழிலாகவும், வெளியில் சில நிகழ்வுகளை பதிவுசெய்யும் சடங்காகவுமே இது கருதப்படுகிறது.

புகைப்படக் கண்காட்சிகளையோ, தமது ஆளுமைகளை ஸ்தாபித்துக் கொண்டவர்களையோ இங்கு காணமுடியாமலே இருக்கிறது.

இவை எல்லாம் பற்றிய உணர்தலுடனேயே, அனைவரின் கவனத்தையும் இத்துறையின்பால் ஈர்க்கும் முன்முயற்சியாக இக்கண்காட்சி நடைபெறுகிறது'' என்று தெரிவித்தார். ✶

எஸ். ஜே. பி. ரட்ணதுரை

## விடுதலை!

கரையில் மோதும்
அலைகளில்
ரத்த நுரைகள்......
பகலில் சிவந்து விடும்
குமரித் தொடுவானம்......

நெற்றிப் பொட்டை
அழித்து விட்டோடும்
ரத்த வெள்ளங்கள்......

அசோக
மரத்தடிக் கூடாரத்தில்
எமன் விலாசம்

அங்கே
தமிழ் மானம்
நிர்வாணப்படுத்தப்படுகின்றது......

இங்கே, தமிழன்
முக்காடு போட்டுக்கொள்கின்றான்......

அநாதை என்று
தாய்
பெயர் சூட்டிய
பிள்ளைக்கு
தாய்வீடு
அநாதை விடுதி......

பார்வை உள்ளவன்போல்
குருடனின் ஆட்டுழியம்......
குருடாய் நடிக்கும்
பார்வைகள் நாம்

விரைவில்
ஈழம் விடுதலையாகும்
இனமே அழிந்து விட்டபின்!

- சந்ரோதயன் -

(நன்றி: ஆனந்தவிகடன் 19 - 10 - 1986)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இவர்களுக்கு அனுமதி

அறிமுகப்படுத்தும் நட்சத்திரங்களை முதல் படம் வெளியாகுமுன் வேறு படங்களில் நடிக்க அனுமதிப்பதில்லை.

ஆனால் "கடலோரக் கவிதைகள்" படம் அதற்கு விதிவிலக்கு.

இப்படத்தில் அறிமுகமாகும் ராஜாவையும் ரேகாவையும் வேறு படங்களில் நடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

### அனுராதாவின் 'ஆறுதல்'

படங்களில் நடிக்கும் போது பட்டுப்புடைவை கட்ட அனுராதாவுக்குச் சந்தர்ப்பமே இடைப்பதில்லை.

ஆகவே அவர் வெளியே எங்கு சென்றாலும் பட்டுப்புடைவை அணிந்து தான் செல்கிறார்.

இது அவருக்கு ஆறுதலாக இருக்கும் போலும்!



## வெள்ளித் திரை

## லண்டனில் நளினிக்கு ஏற்பட்ட அனுபவம்

அண்மையில் லண்டன் சென்ற நளினி மூதாட்டி ஒருவரின் ஆசிபெற்று சென்னை திரும்பினார்.

இச்சம்பவத்தை "ஒரு மறக்க முடியாத அனுபவம்" என்று கூறுகிறார் நளினி.

அந்தச் சம்பவத்தை அவரே கூறுகிறார்;

"நான் லண்டன் வந்திருப்பதை அறிந்த தொண்ணூற்றி ஐந்து வயது மூதாட்டி ஒருவர் என்னை எப்படியும் சந்தித்துவிடவேண்டும் என்று ஆவலாய் இருப்பதை அறிந்தேன்.

ஒருநாள் அவர் வீடு சென்று சந்தித்தேன்.

என்னைக் கண்டதும் அவர் அப்படியே அள்ளி அணைத்து 'மேல் மருவத்தூர் ஆதி பராசக்தியே எங்கள் வீட்டுக்கு வந்திருக்கு சாகிறத்துக்குள்ளே எப்படியாவது உன்னைப் பார்த்திடணும்னு நினைச்சிருந்தேன். நீ நல்லா இருக்கணும்மா!" என்று வாழ்த்தினார்.

நான் அந்த அம்மையாரின் காலில் விழுந்து ஆசி பெற்றுக் கொண்டேன்.

நான் நடிகையானதின் உண்மையான பலனை அப்போதுதான் அனுபவித்தேன்' என்கிறார் நளினி.

**● தயாரிப்பு: பேரின்பம் ●**

## பாலுமகேந்திராவின் 'இரட்டைவால் குருவி'

மோகன், ராதிகா, அர்ச்சனா ஆகியோர் நடிக்கும் 'இரட்டைவால் குருவி' என்ற படத்தை இயக்குகிறார் பாலுமகேந்திரா.

பாலுமகேந்திராவின் இந்தப் படத்தின் படப்பிடிப்பில் ஒரு மாற்றம்; அது என்ன மாற்றம்?

பொதுவாக இவர் படங்களின் படப்பிடிப்பு, வெளிப்புறப் படப்பிடிப்பு என்றால் ஊட்டியாகவும், இன்டோர் என்றால் பெங்களூராகவும் தான் இதுவரை இருந்து வந்திருக்கிறது.

ஆனால் இந்தப் படத்திற்கு ஸ்ருடியோவிலேயே 'செட்' போட்டு படத்தை முடித்திருக்கிறார் பாலுமகேந்திரா.

## நிழலும் நிஜமும்-

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

எப்படி இந்தத் துணிவு ஏற்பட்டது இவளுக்கு? வீட்டு நிலைமையை எண்ணினால் இவளால் இப்படி நடந்துகொள்ள இயலுமா? இதை அறிந்தவர்கள் யாராவது பார்த்தால், இதற்குக் காது மூக்கு வைத்துக் கதை கட்டி, நாலைக்கு நாலுபேருக்குப் பரப்பினால்?

அப்புறம் குடும்ப கௌரவம் காற்றில் பறக்குமே? உலைவாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியாதே?

என்னால் தொடர்ந்து அந்த இடத்தில் நிற்க முடியவில்லை என் உற்சாகமெல்லாம் எங்கோ பறந்துவிட நடைப்பிணமாக வீடுவந்து சேர்ந்தேன்

அம்மா என்று ஓடி வந்த கண்ணனை, வழக்கம்போல தூக்கி அன்பு மழை பொழியாமல் கொண்டுவந்த பலானை அவன் கையில் திணித்துவிட்டுப் படுக்கையில் விழுந்தேன்.

காலைமுதல் மாலைவரை ஓயாமல் நெசவு நூலை இழுத்து இழுத்து அடித்ததால் காலும் கையும் சோர்வு தாங்காமல் விண்விண் என்று வலித்தன. அத்தோடு கடைத்தெருவில் கண்ட எதிர்பாராத காட்சியால் மூளை குழம்பி தலைகூட விண்விண் என்று வலித்தது அம்மா தந்த தேநீர் தொண்டைக்குள் இதமாக இறங்கியது. கண்ணை மூடிக்கொண்டு உறங்கிவிட்டேன்.

எவ்வளவு நேரம்தான் அப்படி உறங்கினேனோ தெரியாது நான் கண் விழித்தபோது அம்மாவும் அப்பாவும் கோயிலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள் கண்ணன் தானும் வருவேன் என்று அடம் பிடித்துக்கொண்டிருந்தான்

லலிதா இன்னும் வரவில்லையோ என்ற உணர்வு எழ மெல்ல எழுந்து கூடத்துக்கு வந்தேன். மேசையில் ஏதோ புத்தகத்தை விரித்துப் படித்துக் கொண்டிருந்தாள் லலிதா. உண்மையில் படிக்கிறாளோ? இல்லை, படிக்கிறது மாதிரிப் பாவனை பண்ணுகிறாளோ என்று மனம் எண்ணுகிறது.

இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா? என்று சொல்லக்கூடியது மாதிரி எவ்வளவு அமைதியாக இருக்கிறாள் ஒருவேளை கடைவீதியில் என்னை இவள் கண்டிருப்பாளோ? எப்படியும் இதற்கு ஒருமுடிவு கண்டாக வேண்டும்

அவளிடமே நேராக இதைப் பற்றிக் கேட்டுவிட வேண்டியதுதான்: இந்தக் குடும்பத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு போக்காக நடந்துகொள்கிறார்களே என்பதை நினைக்க மனதை ஏதோ உறுத்துகிறது. இதெல்லாம் வயதுக் கோளாறு என்று எண்ணவும் என் மனது மறுக்கிறது.

இவளுக்கு இப்போது எத்தனை வயது? பதினெட்டு வயது ஒரு வயதா? இந்த இளம் வயதில், உலகம் புரியாத வயதில், இப்படி உணர்ச்சிகளுக்கு ஆளாகி மனதை அலையவிட்டால் வாழ்க்கையே பாழாகிவிடுமே?

அவள்தான் தெரியாத்தனத்தில் இப்படி நடந்துகொண்டால் யாராவது ஒருத்தர் புத்திமதி கூறித்திருத்த வேண்டியது அவசியம்தானே? இந்த விஷயத்தை அப்பாவிடம் சொல்லாமா? அதனால் என்ன பயன் விளைந்துவிடப் போகிறது? மனங்கள் தான் வேற்றுமையடையும்.

அப்பாவின் கண்டிப்புத்தனம் இதற்கு மருந்தாகாது. ஏன் நானே புத்திமதி சொல்லிப் பார்க்கக் கூடாது? சொந்தத் தங்கையின் வாழ்க்கைப் பிரச்சினையில் தலையிட அக்காளுக்கு உரிமை இல்லையா? மனப்போராட்டங்களில் மூழ்கி எழுந்து கடைசியில் நானே இதைப்பற்றி லலிதாவிடம் கதைப்பதாக முடிவு எடுக்கிறேன். அதற்குத் தனிமை தேவை. இன்றைக்கே, இப்போதே ஏன் கதைக்கக் கூடாது? அருமையான சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. (வளரும்)

## ஞான சஞ்சீவி---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மான பரிணாம வளர்ச்சிகளைப் பெறுவதாலும், பிரகிருதியை இயற்கை என்றும் சொல்லப்படுகிறது.

பிரகிருதியின் செயற்பாட்டுக்கு ஆதாரமாக பஞ்சபூதங்கள் எனப்படும் பிருதுவி (மண்) அப்பு (நீர்) தேயு (நெருப்பு) வாயு (காற்று) ஆகாசம் (ஈதர்) ஆகிய முதல் மூலதத்துவப் பொருள்கள் இயங்குகின்றன

ஆகாசத்தின் ஏனைய நான்கு பூதங்களும் ஒன்றோடொன்று இணைந்து செயற்படுகின்றன ஆகாசத்தைத் தவிர மற்றைய மூலப் பொருள்களுக்கு உருத்திரிபுகள் ஏற்படுகின்றன இவைகளால் ஜீவராசிகளுக்கு நன்மைகளும், தீமைகளும் உண்டாகின்றன.

பிரகிருதியின் செயற்பாடுகள் அனைத்தும் சத்வம், ரஜஸ், தாமசம் ஆகிய முக்குணங்களில் அடங்கியிருக்கின்றன.

"நற்செய்கையின் பயன் சாத்விகமும் தூய்மையும், ரஜோ குணத்தின் பயனோ துன்பம், தமோகுணத்தின் விளைவு அறியின்மை", என்று கீதை கூறுகின்றது.

பிரகிருதி சொரூபமாயிருக்கும் இந்த மூன்று குணங்களுமே கர்மாவுக்குக் காரணமானவை. இந்திரியங்களால் ஏவப்படும் செயற்பாடுகள் அனைத்தும் இக் குணங்களிலிருந்து உண்டானவையே

பிரகிருதியை மோகினி பிரகிருதி என்றும் தெய்வீக பிரகிருதி என்றும் பாகுபடுத்தப்படுகிறது. மோகினி பிரகிருதி என்பது மனிதனை தசா இன்பங்களில் நாட்டமடையச் செய்து மாலையில் சிக்க வைப்பது இதற்கு எதிரிடையானது தெய்விகப் பிரகிருதி இது சாத்வீக மனப்பாங்கை ஏற்படுத்தி இறைவன் பாதையில் இட்டுச் செல்வது ✶

## அறிஞர் அறிமுகம்---

(4ஆம் பக்க தொடர்ச்சி)

குடியிருந்த விசேடத்தால், பண்டிதமணி அவர்களோடு மிகநெருக்கமாகப் பழகி, ஆறுமுகநாவலர் பாரம்பரியம், பாரதகர்மம், இராமாயணரசனை, ஈழத்துப் புலவர்கள் வரலாறு இந்தியாதி துறைகளில் பெரும் பாண்டித்தியம் பெற்று, இந்துக்கல்லூரியில் இத்துறைகளை நல்ல முறையில் வியாபகமுறச் செய்தவர்.

இலங்கையில் முதற்தரமான விடுதிமேற்பார்வையாளராயிருந்து, கடும் கட்டுப்பாடும், சிறந்த பண்பாடும் நிலவச் செய்ததோடு அறுசுவை உணவு நிறையப் பரிமாறச் செய்தவர்.

திருநெல்வேலியின் மாணாக்கர்கள் பல கல்லூரிகளில் பயின்றுவந்த போதிலும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் அதிபரான சிவராவ் அவர்கள் தம் மாணாக்கர்களுக்குப் பேசும் வாசகமே திருநெல்வேலி இந்துவாலிப சங்கத்தின் தோற்றத்துக்கு ஏதுவாயிற்று என அறியக்கிடக்கிறது.

சங்கத்தின் பெரிய சண்டியனும் வழிநடத்தியும் பொன்னண்ணன் என்பவரேதான். அவருடைய ஊரபிமானம் பண்டிதமணி அவர்களை வெகுவாக உருக்கிவிட்டது. பொன்னண்ணனின் ஒத்துழைப்போடுதான், முத்துக்கம்பி வித்தியாசாலை இன்றிருக்கும் இடத்துக்கு மாற்றப் பெற்று, அரசினர் நன்கொடைபெறும் முயற்சியும் கைகூடியது. பழைய முத்துத்தம்பி வித்தியாசாலை பெரும்தெருவில் புறமதத்தவர் கெடுபிடியால் சிலகாலம் நலிந்து கிடந்தது

யோகர் சுவாமிகள்

இந்துவாலிப சங்கத்தாரின் விடாமுயற்சிப் பணிகள் பெரியவர்கள் பலரையும் கவர்ந்ததில் வியப்பில்லை. தவத்திரு யோகசுவாமிகள் ஒழுங்காகச் சங்கமண்டபத்துக்குச் சென்று, தரமான பத்திரிகைகள், சஞ்சிகைகளைப் பிறரைக்கொண்டு படிப்பித்துக் கேட்டுக் கண்ணயர்ந்து எழுந்து போவதும் வழக்கமாக இருந்தது.

அங்கத்தவர்களுள் சிலர் அரசியலிலும் ஈடுபட்டு டொனமூர்த் திருத்தம் காரணமாக எழுந்த பகிஷ்கார இயக்கங்களில் ஈடுபட்டதும் உண்டு.

அக்காலத்தில் எழுந்த சூரியமல் என்னும் பூவியக்கம் இடதுசாரிக் கூட்டமாகப் பரிணமித்த போது திருநெல்வேலி வாலிபர்கள் பலர் அதில் தீவிர பங்கெடுத்ததும் உண்டு.

பொன்னண்ணன் மூலம் பண்டிதமணி அவர்கள் இடையிடை இந்துவாலிப சங்கத்தார் பணிகளிலும் பங்குபற்றி இடதுசாரிகளின் போக்குக்கு மதிப்புக்கொடுத்ததும் உண்டு. சமுதாயம் மாறியமையும்போது அதற்கு முட்டுக்கட்டையாக இருத்தலாகாது எனக்கருதி, முற்போக்குக் கொள்கைக்கு ஆதரவு நல்கி, இளைஞர்கள் மெச்சும்வகையில் அவர் பாரதியாரைப்பற்றி மிக அருமையாகப் பேசியதும் உண்டு.

எல்லாவகையாலும் அவருக்குத் திருநெல்வேலி, திருநல்வேலியாயிற்று.

(வளரும்)

## தமிழர் பிரச்சினையில்---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டி நிற்கின்றனர் என்பதையும் இதன் பொருட்டு அரசின் சமீபகாலநடவடிக்கை களையும் எடுத்து விளக்கினேன்.

கேள்வி: எமது இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சோவியத் யூனியன் ஏதாவது பங்களிப்பைச் செய்கிறதென்று அவர்களின் பேச்சிலிருந்து நீங்கள் ஊகிக்க முடிந்ததா?

பதில்: ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுதலைக்காகப் போராடும் எந்த நாடும் எந்த இனமும் சோஷலிச நாடுகளின் ஆதரவைப் பெறுமென்று ஐக்கிய நாடுகளின் சபையில் சோவியத் யூனியன் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறது.

இதற்கமைய நிக்கரகுவா, லிபியா, பாலஸ்தீன விடுதலை போராட்டம், தென் ஆபிரிக்கா கறுப்பு இன மக்களின் போராட்டம் போன்ற பல நாடுகளில் சோவியத் யூனியன் கையாண்ட நடவடிக்கைகள் உலகறிந்த விடயம்

எமது இனப் போராட்டத்தில் நேரடியாகத் தலையிட முடியாத நிலைப்பாடிருந்தும் கூட அண்டை நாடான இந்தியா இப்பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பை ஏற்றிருக்கின்ற காரணத்தினால் அதற்கு ஒரு பெரும் பக்கபலமாக சோவியத் யூனியனிருக்கிறதென்பதை ஊகிக்க முடிகிறது.

இதற்கு மேலாக சோவியத் யூனியனுக்கு தத்துவார்த்த ரீதியான ஒரு கண்ணோட்டமுண்டு. மூன்றுவது மண்டல நாடுகளில் விடுதலைக்காகப் போராடும் நாடுகள் இனங்களின் பொது எதிரியாகிய ஏகாதிபத்தியத்தைப் பலவீனப்படுத்தி இவைகளினால் மூண்டு கொடுக்கப்படும் சர்வாதிகார ஆட்சிகளை முறியடிக்க முடியும்.

இதன் பயனாக அரசியல் சமூகப் பொருளாதார விடுதலைப்போராட்டம் வெற்றி பெற முடியும். இதன் நோக்கில் தான் சோவியத் யூனியன் உலகளாவிய சமாதானத்திற்கான போராட்டத்தை முதல் குறிக்கோளாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது என விளக்கப்பட்டுள்ளது

ஆயுதப் பரிகரணம், அணுவாயுதக் குறைப்பு, அணுவாயுதப் பரிசோதனை நிறுத்தல், அண்டவெளியைச் சமாதானத்திற்காகப் பயன்படுத்தல் ஆகியன இப்போராட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். இவ்விலக்கை அடையும் பொழுது ஓர் புதிய உலகை சிருஷ்டித்தாகும்.

கேள்வி, இனப் பிரச்சினை கூர்மையடைந்துள்ள இவ்வேளையில் பல்வேறு இன, மத மொழி வேறுபாடுடைய மக்களைக் கொண்ட சோவியத் நாட்டில் எவ்வாறு மக்கள் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ்கிறார்கள்? அம்முறையை எந்தளவிற்கு இலங்கையில் பயன்படுத்தலாம்?

பதில்; சோவியத் நாட்டில் 100க்கு மேற்பட்ட இனங்கள் சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்கின்றன. இது அக்டோபர் புரட்சி ஏற்பட்ட பின்னர் ஒரு சோஷலிச அமைப்பிலேதான் சாத்தியமாயிற்று

கேள்வி: சோவியத் நாட்டின் நவீன பொருளாதார முறைகளை எந்தளவிற்கு இலங்கையில் பயன்படுத்தி வெற்றி காண முடியுமெனக் கருதுகிறீர்கள்?

பதில்: எங்கள் நாட்டில் போலல்லாது அந்நாட்டில் நடைமுறையிலுள்ளது 'சோஷலிசப் பொருளாதாரம்'. இதன் சாதனைகள் முதலாளித்துவ முகாமிற்குத் தலைமை வகிக்கும் பெரிய வல்லரசான அமெரிக்காவுக்கே சவாலாக அமைந்திருக்கிறது 2000 ஆண்டுடன் நவீன தொழில் நுட்ப வளர்ச்சியின் மூலம் சகல துறைகளிலும் உற்பத்திப் பெருக்கம், அரசியல் சமூக வளர்ச்சி பெற்று அமெரிக்காவைத் தாண்டி முன்னணியில் நிற்கும். இதே மாதிரி எங்கள் சுபீட்சமான வாழ்வை அடைய வேண்டுமாயின் [illegible]

## போதை---

(4ஆம் பக்க தொடர்ச்சி)

புகைப்பவர்கள், கடமையில் ஈடுபட்டிருக்கும் வேளையில் புகைக்காதிருத்தல்

தொலைக்காட்சி, வானொலி மூலம் விளம்பரம் செய்வதைத் தடுத்தல்.


பகிரங்க இடங்களில் புகைத்தலைத் தடை செய்தல்.

பஸ்வண்டிகளில் புகைத்தல் சட்டத்துக்கு விரோதமானது என்பதை வலியுறுத்துதல்

வைத்திய நிபுணர்கள் பாடசாலைகளில் புகைத்தலால் ஏற்படும் தீமைகள், நோய்கள் அபாயங்கள் பற்றி விளக்[illegible]

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 45



அனுப்புபவர் பெயர்:

திரு/திருமதி/செல்வன்/செல்வி ........................

........................

வயது: ........................

விலாசம்: ........................

........................

ஒப்பம்: ........................

**இடமிருந்து வலம்**

1. இலங்கைக்கு அண்மித்துள்ள கடற்பகுதி
6. படி
7. காகிதம்
9. யான்
10. சமிபாட்டுடன் தொடர்புடைய உடலுறுப்பு
13. காட்டில் வாழும் இது இப்போது சரணாலயங்களிலும் உண்டு.
14. சறள்
15. குழந்தையைப் பராமரிப்பவள்
16. பிறவி
18. துப்பாக்கி சேராத இல்லை
19. ஒரு நிறம்
21. பஞ்சாங்க உறுப்பிலொன்று
22. திறமை

**மேலிருந்து கீழ்**

1. தேவனருள் பெற்றுப் பாடும் புலவன்
2. சாகுந்தலம் இவரால் இயற்றப்பட்டது
3. மறுமொழி
4. தட்புத்த இலக்கணமாக ராமாயணம் இவனைக் கூறுகின்றது
5. இரத்தினக்கல் ஒளி வீசும்போது தெரிவது
8. அழி
9. நாங்கள்
11. காலன்
12. மரம்
13. புத்தபிரானின் தாய்
14. சிறுவருக்குப் பிரியமான பறக்கும் உயிரினம்
15. ஓமகுண்டலத்தில் பெய்யப்படுவது
16. வல்லமை
17. மைந்தன்
20. மஜ்னுவின் காதலி

### போட்டி விதிகள்

சொற்சிலம்பப் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்.

1. "சொற்சிலம்பம்" குறுக்கெழுத்துப் போட்டியில் பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே பங்குபற்றலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.
3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. கூப்பனை நிரப்பும்போது திரு. அல்லது திருமதி அல்லது செல்வன் அல்லது செல்வி என்பது கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும்.
5. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
6. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்
7. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல 45 சஞ்சீவி, தபால் பெட்டி இல 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
8. உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது

✶ சொற்சிலம்பம் போட்டிகளில் பங்குபற்றும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பல சமயங்களில் மூன்றுக்கும் அதிகமான வாசகர்களும் சரியான விடையை அனுப்புகிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சரியான விடை எழுதுவோரில் இருந்து அதிஷ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

✶ பரிசு பெற்றவர்களுக்கு உரிய பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வரவேண்டியதில்லை.

### சொற்சிலம்பம் இல. 43 பரிசு பெற்றவர்கள் விவரம்

முதலாம் பரிசு:- செல்வி ஆனந்தரூபி அம்பலவாணர், பல்தொழில் நுட்பக் கல்லூரி, கொக்குவில்

இரண்டாம் பரிசு:- திரு தியாகராசா சண்முகராசா, பொலிஸ் நிலையத்தடி, சுன்னாகம்.

மூன்றாம் பரிசு:- திருமதி விசாலாட்சி அம்மா தியாகராசா, சங்கானை கிழக்கு, சண்டிலிப்பாய்.

### சொற்சிலம்பம் இல. 43 விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. சரவணபவன், 5. மலை, 6. தாப்பன், 8 பசி, 11. குறிதவறுமல், 14. சிலை, 15. விட, 16. ரவி, 18. கதவு 19. திருமணம், 20. ரிஷி,

**இடமிருந்து வலம்**

1 சபதம், 2. வழிப்பறி, 3 பலன், 4. ன்மகா 7. பரிதவி, 9, சுரு, 10. கல்வி, 11, குகை, 12. வடகம், 13. மரவுரி, 14. சித்தி. 17. யம.

## வன்னியில் உள்ள - - -

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆங்கிலேயருக்குமிடையில் நாடு பிடிக்கும் போட்டி நிகழ்ந்த காலமாகும்.

தன் மூதாதையர் காலத்தில் வன்னிநாடு நடாத்து கொண்ட விதம் குறித்தும், அதன் பிறகும் வன்னியர்கள் சிங்களவருடன் வைத்திருந்த கூடா நட்பைவிட்டும் எச்சரிக்கை கொண்டிருந்த சங்கிலி மன்னன் ஆட்சிபீடமேறியதும் உடனடியாக எல்லைக்காவற் படைகளை உருவாக்கி வன்னிநாட்டு எல்லையிலே நிலைகொள்ள வைத்திருந்தான்.

தற்போது தோற்றுப் போன பறங்கியர் திசையை மாற்றி, தரை மார்க்கமாக வன்னியூடாக வரக்கூடுமென எண்ணி எல்லைப்படையை உஷார் நிலையிலிருக்கச் செய்கிறான் மன்னன்.

(வளரும்)

குதல்.

வைத்திய சாலைகள், பாடசாலைகள் ஆகிய இடங்களில் புகைக்கக் கூடாது என்ற கட்டுப்பாட்டை நடைமுறைப் படுத்துதல்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நெற் பயிர்ச் செய்கை

# பசளை வகைகளும் பாவனை முறைகளும்

## கமமும் புலமும்

பகுதி - 2

வி. செல்வநாயகம்

உரப் பசளையென்பது பயிர் உணவாகும். இதனை சரியான நேரத்தில் உரிய அளவில் பாவிக்கும்போது விளைச்சல் அதிகரிக்கின்றது முக்கியமாக புதிய திருந்திய நெல் இனங்கள் பசளையிடப்படாவிடில் அது கொடுக்கக் கூடிய உச்ச விளைச்சலைத் தரமாட்டா.

இவ் உரப்பசளைகள் பாவிக்கும் தன்மையைப் பொறுத்து அடிக்கட்டுப் பசளை, மேற்கட்டுப்பசளை என இரு பிரிவாகப் பிரிக்கப்படும்.

அடிக்கட்டுப் பசளை:

பயிர் நடுகைக்கு அல்லது விதைப்புக்கு முன் பாவிப்பது அடிக்கட்டுப் பசளையாகும் இப்பசளையானது நெற்பயிருக்கு சிபார்சு செய்யப்பட்ட நைதரசனில் சிறிதளவையும், பொஸ்பரஸ் முழுவதையும், ஓரளவு பொட்டாசியத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது

இதிலுள்ள பயிருணவுகள் பயிரின் ஆரம்ப வளர்ச்சியைத் தூண்டி வீரியமான பயிரை உருவாக்குகின்றது. அத்துடன் பயிரின் வேர்த்தொகுதியை நன்கு விருத்தியடையச் செய்யக்கூடிய பொஸ்பரஸ் மூலகம் முழுவதும் இதில் அடங்கியிருப்பதால் அடிக்கட்டுப் பசளையிடுதல் மிகவும் முக்கியமாகின்றது.

அடிக்கட்டு பசளையிடல்

இது "வீ" கலவை என்ற பெயரில் கிடைக்கக்கூடியதாயுள்ளது இக் கலவையில் காணப்படும் பொஸ்பரஸ் பசளையானது நீரில் கரைந்து மற்றய பசளைகளைப்போல வேர்த்தொகுதிக்கு செல்லும் தன்மையற்றது. எனவே இப்பசளையை வேருக்குச் சமீபமாக, மண்ணின் கீழ்ப் பகுதியில் இருக்கச் செய்தல் அவசியமாகின்றது

ஆகவே நடுகையின் போது அல்லது விதைப் பின்போது கடைசி உழவுடன் இப்பசளையையிட்டு மண்ணுடன் நன்கு கலக்கச் செய்தல் அவசியம்.

விதைப் பின்போது பசளை கிடைக்காத சந்தர்ப்பங்களில் மட்டும் ஒரு வாரகாலத்தள் அடிக்கட்டு பசளை பாவிக்கலாம். இப்படிப் பாவிப்பதால் பயிருக்கு ஓரளவாவது பயன் கிடைக்கும்.

மேற்கட்டுப் பசளை:

பயிர் நாட்டிய பின் அல்லது முளைத்த பின் பாவிப்பது மேற்கட்டுப் பசளையாகும். இது 'நைதரச' னைக் கொண்ட யூறியா உரமாகவும் 'நைதரசன்' - 'பொட்டாசி' யத்தைக்கொண்ட 'ரீ. டீ. எம்' (T D. M) உரக்கலவையாகவும் கிடைக்கின்றது.

எனவே பயிரின் பதிய வளர்ச்சிக் காலத்தில் "நைதரசன்" கொண்ட யூறியா பசளை பாவிப்பதால் கூடிய மட்டங்கள் தோன்றச் செய்யும். இனப்பெருக்க வளர்ச்சிப் பருவத்தில் "நைதரசன், பொட்டாசியம்" கொண்ட ரீ. டி எம் கலவை பாவிப்பதால் நீண்ட கதிர் உற்பத்தி, கூடிய எண்ணிக்கையும் பருமனுனதுமான மணிகள் தோன்றச் செய்தல், பதரற்ற நிறைவான மணிகள் உற்பத்தி, பயிர் பாட்டத்தில் சாயாத தன்மை என்பவற்றை ஏற்படுத்தும்.

மேற்கட்டு பசளை பாவித்தல்

இப் பசளை பாவிக்கும் நேரத்தில் வயலில் ½''—1'' நீர் பரவலாக நிற்பது அவசியம். கூடிய அளவு நீர் பசளையை வீண் விரயமாகச் செய்யும். நீர் பாய்ச்சுவதற்கு அல்லது வெளியேற்றுவதற்கு முடியாத மாணுவாரிக்காணிகளில் கமக்காரர் தகுந்த நேரத்தைப் பாவித்து பசளையிட வேண்டும்.

பசளை சிபார்சு

BG 34-6, BG 94-1 போன்ற 3½ மாத புதிய திருந்திய இனங்களுக்கு:

5 மாத வயதுடைய உள்ளூர் இனங்களுக்கு மூன்றும் முறை இடப்படுகின்ற மேற்கட்டுப் பசளை 16ம் வாரத்தில் இடப்படல் வேண்டும்.

குறிப்பு:-

சிபார்சு செய்யப்பட்ட அளவு பசளையை உரிய நேரத்தில் பாவிப்பதாக விளைச்சலை அதிகரிக்கச் செய்யமுடியும்.

குறைந்த அளவு பசளையை பாவிப்பதாலோ, அல்லது தனிய யூறியா பசளை மட்டும் பாவிப்பதாலோ எதிர்பார்த்த பயனைப் பெறமுடியாது.

அதிக அளவில் யூரியா உரம் இடப்படும் பொழுது பயிர் பதிய வளர்ச்சி அதிகரித்து பாட்டத்தில் விழும் தன்மை ஏற்படும் அத்துடன் நோய் பூச்சி புழு தாக்கமும் இலகுவாக ஏற்படும்

உரப்பசளைகள் இடப்படும்பொழுது, மண்ணில் சேதனப்பசளை இருப்பின் பயிர் மூலகங்களை பயிர் இலகுவாக எடுப்பதற்கு சேதனப் பசளை ஊக்கியாக தொழிற்படுகின்றது. எனவே வயலுக்கு சேதனப்பசளை இடுதலும் அவசியமாகின்றது

(முற்றும்)

| | பசளை | பாவிக்கும் காலம் | அளவு |
|---|---|---|---|
| அடிக்கட்டு | "வீ" கலவை | விதைப்பின்போது | 75 கிலோ / ஏக் |
| மேற்கட்டு | | | |
| 1ம் முறை | யூறியா | முளைத்து 2ம் வாரம் | 25 கிலோ / ஏக் |
| 2ம் முறை | யூறியா | முளைத்து 5ம் வாரம் | 12½ கிலோ / ஏக் |
| 3ம் முறை | ரீ டி. எம் | முளைத்து 8ம் வாரம் | 50 கிலோ / ஏக் |

62 / 355 போன்ற 3½ மாத பழைய திருந்திய இனங்களுக்கும் உள்ளூர் இனங்களுக்கும்:

| | பசளை | பாவிக்கும் காலம் | அளவு |
|---|---|---|---|
| அடிக்கட்டு | "வீ" கலவை | விதைப்பின்போது | 50 கிலோ / ஏக் |
| மேற்கட்டு | | | |
| 1ம் முறை | "யூறியா" | முளைத்து 2ம் வாரம் | 12½ கிலோ / ஏக் |
| 2ம் முறை | ரீ. டி. எம் | முளைத்து 8ம் வாரம் | 37½ கிலோ / ஏக் |

BG 400 - 1 போன்ற 4 - 4½ மாத புதிய திருந்திய இனங்களுக்கு:

| | பசளை | பாவிக்கும் காலம் | அளவு |
|---|---|---|---|
| அடிக்கட்டு | "வீ" கலவை | விதைப்பின்போது | 75 கிலோ / ஏக் |
| மேற்கட்டு; | | | |
| 1ம் முறை | யூறியா | முளைத்து 2ம் வாரம் | 25 கிலோ / ஏக் |
| 2ம் முறை | யூறியா | முளைத்து 6ம் வாரம் | 25 கிலோ / ஏக் |
| 3ம் முறை | ரீ. டி. எம் | முளைத்து 10ம் வாரம் | 50 கிலோ / ஏக் |

H4 போன்ற 4 - 4½ மாத வயதுடைய பழைய திருந்திய இனங்களுக்கும் உள்ளூர் இனங்களுக்கும்;

| | பசளை | பாவிக்கும் காலம் | அளவு |
|---|---|---|---|
| அடிக்கட்டு | "வீ" கலவை | விதைப்பின்போது | 50 கிலோ / ஏக் |
| மேற்கட்டு | | | |
| 1ம் முறை | "யூறியா | முளைத்து 2ம் வாரம் | 12½ கிலோ / ஏக் |
| 2ம் முறை | யூறியா | முளைத்து 6ம் வாரம் | 12½ கிலோ / ஏக் |
| 3ம் முறை | ரீ. டி. எம் | முளைத்து 10ம் வாரம் | 37½ கிலோ / ஏக் |

# தருமம் செய்வதற்குப் பழக முடியாதா....?

தருமம் தலை காக்கும் என்பார்கள். ஏனெனில் நோய்நொடிகள், வறுமை, துன்பம் முதலானவற்றிலிருந்து உங்களைக் காக்கும் சக்தி அதற்கு உண்டு.

ஒரு நாள் யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் மினிபஸ் ஒன்றில் அமர்ந்திருந்தேன். என் அருகே சால்சட்டை போட்ட இரண்டு பெரியவர்கள் உட்கார்ந்திருந்தார்கள்

அப்போது ஒரு பையன் திருகோணமலை அகதிகளுக்காக அடைக்கப்பட்ட கடலைப் பைக்கற் ஒன்றை அவர்கள் முன் நீட்டினுன். அகதிகளுக்காக ஒரு பைக்கற்றை வாங்குங்கள் என்று வேண்டினுன்.

ஒரு பெரியவர் மற்றையவரைப் பார்த்து இது பெரிய நியூசென்ஸ் ஆகப் போய்விட்டதென்று கூறினுர்

வழக்கமாக யாழ்ப்பாணம் போகும்போது ஒரு பைக்கற் வாங்கும் நானும் அன்று வாங்கவில்லை அத்துடன் உள்ளிருந்த வேறு எவருமே வாங்கவில்லை.

காரணம் எவரும் அந்தப் பெரியவர்களை அவமதிக்க விரும்பவில்லை. அன்று அந்த படித்தவர்கள் வாயை மூடிக்கொண்டு இருந்திருந்தால் வேறு யாராவது

### சிந்திக்க வைத்த சம்பவம்

வாங்கியிருப்பார்கள்

கொடுப்பதன் மூலம் தமது பணம் குறைந்துவிடுமென்று சிலர் நினைக்கிருர்கள் இது மிகவும் தவருனது

ஒருவர் மன விருப்பத்துடன் தருமம் செய்வாராயின் அவரை துன்பம் என்றும் அணுகாது

உதாரணத்திற்கு மேற்கு நாடுகளைப் பார்ப்போமாயின் பெற்ரோல் உச்சவிலை ஏறியபோதும் கூட கைத்தொழில் நாடுகளான அவர்களின் பொருளாதாரத்தை அசைக்க முடியவில்லை.

அவர்கள் தருமம் செய்கிருர்களா என்று ஆச்சரியப்படாதீர்கள். அங்கெல்லாம் தருமம் செய்ய ஊக்குவிப்பதற்கு பல சாதனங்களைப் பயன்படுத்துகிருர்கள்

ஆபிரிக்காவில் பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்ற நிதி சேகரிக்கிருேமென்றும், 1000டொலர் நிதி உதவி செய்தால் ஆபிரிக்காவில் உங்கள் பெயரில் ஒரு அனுதைச் சிறுவனைத் தத்தெடுத்து வளர்ப்போமென்றும் பலவாருக பல நிறுவனங்கள் விளம்பரப்படுத்துகின்றன. ஆனுல் இவ்வாறுன நிறுவனங்கள் இங்கு இல்லை.

அதேபோன்று இங்கும் கூட மனநிலையை தருமம் செய்ய வேண்டிய நிலைக்கு மாற்றி அமைப்பதும் அவசியமாகும். அது அவ்வளவு கஷ்டமானது அல்ல. ஒரு சாப்பாட்டுக் கடைக்குள் சாப்பிடச் செல்கிருேம். வெளியே ஒரு பிச்சைக்காரன் கையை நீட்டுகிருன். 50 சதம் காசைப் போட்டுவிட்டு உள்ளே செல்கிறீர்கள். வழக்கமாக 8 இடியப்பம் சாப்பிடும் நீங்கள் அன்று ஏழுதான் சாப்பிடுகிறீர்கள் உங்கள் வயிறு சரியாக நிறையவில்லை. ஆனுல் மனம் நிறைகிறது.

கடைக்கு மீன் வாங்கப் போகிறீர்கள் அகதிகளுக்காக ஒரு சுவீப் நடத்தப்படுகிறது என வைத்துக்கொள்ளுங்கள். அகதிகளின் கஷ்டத்தை மனதில் நினைக்கிறீர்கள்.

ஒரு சுவீப்பை 2.50இற்கு வாங்குகிறீர்கள் வழக்கமாக 10 ரூபாவிற்கு மீன் வாங்கும் நீங்கள் அன்று 7.50சத மீனுடன் திருப்தி அடைந்துவிடுகிறீர்கள்.

இவ்வாருக உங்கள் மனதைப் பழக்கிக் கொண்டுவாழப்பழகினீர்களாயின் வாழ்க்கை எவ்வளவு இன்பமானது என்பதை உங்களால் உணர முடியும்

சிவம்

# உலக வங்கி பிரசுரத்தில் தமிழ்க் கவிதை

உலக வங்கி வெளியிட்ட பிரசுரம் ஒன்றில் தமிழ்க் கவிதை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

உலக வங்கியில் பணியாற்றும் இலங்கை அதிகாரியின் மனைவியான திருமதி கவ்வாம்பிகை ரங்கநாதன் என்பவர்தான் இக் கவிதையை எழுதி இருக்கிருர்.

இக்கவிதை பிரசுரமானதைத் தொடர்ந்து உலக வங்கியின் பிரசுரங்களில் பயன்படுத்தப்பட்ட 27 ஆவது மொழியாக தமிழ் கருதப்படுகின்றது.

உலக வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் 7,500 பேர் பணிபுரிகின்றனர்.

உலக வங்கியின் பணியாற்றுபவர்களினுல் வெளியிடப்படும் பிரசுரமான World's Word இல்தான் இத் தமிழ்க் கவிதை பிரசுரமாகியுள்ளது வங்கி இப்பிரசுரத்தை வெளியிடாவிட்டாலும் நிதி உதவி செய்கிறது.

✶

# மே- டிசெம்பர் திருமணங்கள்!

100 வயது கிழவருக்கும் 16வயது யுவதிக்கும்; 80 வயது கிழவிக்கும் 22வயது இளைஞனுக்கும் நடைபெறும் திருமணங்கள் மே - டிசெம்பர் திருமணங்கள் என அழைக்கப்படுகின்றன.

இவ்வகை திருமணங்கள் தற்போது மேலை நாடுகளில் அதிகரித்து வருகின்றன.

மே மாத பருவ நிலைக்கும், டிசெம்பர் மாத பருவ நிலைக்கும் இடையில் எவ்வளவு வித்தியாசம் உண்டோ; அவ்வளவு வித்தியாசம் தம்பதிகளின் பருவத்திலும் உண்டு என்பதால் இப் பெயர் வந்தது.

1964 ஆம் ஆண்டு
நிலையத் தலைவராக இருந்த
அமரர் சவிரிமுத்து செபஸ்தியாம்பிள்ளை
(பிரான்சிஸ்)
ஞாபகார்த்தமாக
றெக்கிளமேசன் சனசமூக நிலையம்
நடாத்தும்

## பொது அறிவுப் போட்டி

1. தற்போதைய பாப்பரசரின் பெயர் என்ன?
2. தற்போது உலகில் நிறவெறிக் கொள்கையை கடைப்பிடிக்கும், ஒரு நாட்டுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளது. அந்த நாடு எது?
3. 7நாடுகளின் கூட்டமைப்பு மகாநாடு அண்மையில் பெங்களூரில் நடைபெற்றது அந்தக் கூட்டமைப்பின் பெயர் என்ன?
4. யாழ்நகரில் உதித்து, அண்மையில் ஒரு வருடம் பூர்த்தி செய்த பத்திரிகை எது?
5. ''ஏசியாட்டில்'' அதிக தங்கப்பதக்கங்களை பெற்ற இந்திய வீராங்கனை யார்?
6. மெக்சிக்கோவில் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற அணி எது? அவ்வணியின் தலைவர் யார்?
7. "சார்ஜா"வில் நடைபெற்ற "ஒஸ்டல் ஏசியா" போட்டியில், இறுதி ஓவரின் கடைசிப் பந்தில் சிக்ஸர் அடித்து அணிக்கு வெற்றியீட்டிக் கொடுத்தவர் பாகிஸ்தான் வீரர். அவருக்கு கடைசிப் பந்தை வீசிய வீரர் யார்?
8. உலக அதிசயங்களில் ஒன்று'இந்தியாவில் உள்ளது. அதன் பெயர் என்ன?
9. 1964-ம் ஆண்டு றெக்கிளமேசன் சன சமூக நிலையத் தலைவராக இருந்தவர் யார்?
10. தற்போது ஒரு நாட்டை பெண்ஜனுதிபதி ஆட்சி செய்கின்ருர்? அவரின் பெயர் என்ன? அது எந்த நாடு?

1-ம் பரிசு: ரூ. 500 2-ம் பரிசு: ரூ. 250
3-ம் பரிசு: ரூ. 125
மற்றும் ரூ. 25/- வீதம் 5 ஆறுதல் பரிசுகள்

விதிகள்; விடைகளை சாதாரண வெற்றுத் தாளில் எழுதி அனுப்பவும், ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ஒரு ரூபாய் பெறுமதியுடைய முத்திரை வைத்து அனுப்புதல் வேண்டும்.

முடிவு திகதி: 30-12-1986

அனுப்பவேண்டிய முகவரி:
"பொது அறிவுப் போட்டி''
றெக்கிள மேசன் சன சமூக நிலையம்,
9 A, மத்தியகிழக்கு வீதி, குருநகர்,
யாழ்ப்பாணம்.

# இந்தியா இனப்பிரச்சினையை....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாக அவர் தெரிவித்த கருத்துக்களில் பின்வரும் மூன்றும் முக்கியமானவை.

1 ஆரம்பத்திலிருந்து நாம் 'ஈழம்' என்பதில் நம்பிக்கை வைக்கவில்லை என்று கூறிவருகிறோம் நாம் இதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்

2. நான் இந்தியாவின் மொழிவாரிக் கொள்கைக்குச்சார்பாக இல்லை. ஏற்கனவே இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. ஆகவே அந்த நிலையிலிருந்து திரும்பிப்போவதா என்ற கேள்விக்கே இடம் இல்லை.

3. இலங்கை அரசு தற்போது சமர்ப்பித்துள்ள யோசனைகள் நல்லவை என்று நாம் நம்புகின்றோம்.

இலங்கைத் தமிழர் ஈழம் கோருகிறார்கள். 1977ல் நடைபெற்ற பொதுத்தேர்தல் முடிவு இதைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது. சிங்கள அரசு சிறீலங்கா பிளவுபடுவதை விரும்பவில்லை. இவ்விரு பகுதினருக்குமிடையில் சமரசஞ் செய்து வைப்பவர் இருபகுதியினரையும் விட்டுக்கொடுக்கச் செய்து, ஒரு பகுதியினரையும் பாதிக்காத வகையில் ஒரு தீர்வுக்குவர வழி வகுக்கவேண்டும். அதனால் நடுவர் என்ற வகையில், மேலே தரப்பட்ட முதலாவது கூற்றை,— நாம் ஈழம் என்பதில் நம்பிக்கை வைக்கவில்லை என்பதை- கூறியதற்காக ராஜீவ் மீது குறைகாண முயல்வது முறையல்ல.

தொடர்ந்து பாரதப் பிரதமரின் இரண்டாவது கூற்றுக்கு வருவோம். ஆட்சியிலிருக்கும் எந்த ஒரு அரசும், தனது நாட்டின் அரசியலமைப்பில் மாற்றஞ் செய்ய வேண்டுமென்பதை உணரும்போது, அதற்கேற்ற திருத்தத்தைச் செய்வதே முறை. அந்த வகையில் இந்திய அரசியலமைப்பிலும் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

இப்போது, 'நான் மொழிவாரி மாநிலக் கொள்கைக்குச் சார்பாக இல்லை' எனப் பாரதப் பிரதமர் கூறுகிறார். அவர் தான் கூறுவது சரியானதென உண்மையாகவே உணருவாராகில், தமது அரசியற் சட்டத்துக்குத் திருத்தஞ் செய்து, பாரதத்திலிருந்து மாநில ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டும். ஆனுல் அவர் அப்படிச் செய்வதற்கு ஆயத்தமில்லை. "ஏற்கனவே இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. ஆகவே அந்த நிலையிலிருந்து திரும்பிப்போவதா என்ற கேள்விக்கே இடமில்லை" என்கிறார். தவறு இருப்பதாக உணரப்படும் போது, அதைத் திருத்துவது சரிசெய்யும் வழி. "தவறு இருக்கிறது நான் திருத்த மாட்டேன்" என்று கூறுவது சதிசெய்யும் வழி. இலங்கை இனப்பிரச்சினையில் ராஜீவின் வழி எது செய்யும் வழி?

'நான் விரும்பாவிட்டாலும் என் நாட்டிலிருக்கும் மொழிவாரி மாநில அமைப்பை மாற்றமாட்டேன். அதுபோல இலங்கையிலும் ஏற்கனவே இருக்கும் ஒற்றை ஆட்சி அமைப்பை, மாகாணப் பிரிவுகளை. நீங்கள் விரும்பாவிட்டாலும் மாற்றக் கூடாது சிங்களவர் திட்டமிட்டுக் குடியேறிய தமிழ்ப் பிரதேசம் [illegible] பிரதேசம். அதைத் தமிழ்ப் பிரதேசம் என எவருங் கூறக் கூடாது மொழிவாரி மாநிலக் கொள்கைக்கு நான் சம்மதமில்லை. நீங்களும் மொழிவாரி மாகாண அமைப்பைக் கோரக் கூடாது' என எம்மை மறைமுகமாக எச்சரிக்கும் வழி அவர்வழி! அல்லவா?

### மாநில ஆட்சிநிலை கற்பனையாயிற்று

இந்திய நாட்டிலிருக்கும் மாநில ஆட்சிமுறைக்கு அதிகமாக நாம் எதையும் கேட்கக் கூடாது என ராஜீவ் கருதுகிறார் என எம்மிற் சிலர் செய்த கற்பனையும் இப்போது பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய் விட்டது.

தான் மொழிவாரி மாநிலக் கொள்கைக்குச் சார்பாக இல்லை எனக் கூறும் பாரதப் பிரதமருக்கு, இலங்கையின் கிழக்கு மாகாணத்தை, மொழிவாரியாக மாத்திரமல்ல, சிங்கள, தமிழ், முஸ்லிம் மாகாணங்களென மூன்று மாகாணங்களாக மொழிவாரியாகவும் இனவாரியாகவும் பிரிக்கும் இலங்கை அரசின் யோசனை நல்ல யோசனையாகத் தெரிகிறது.

இதுவரை காலமும் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் இணைப்பதை முஸ்லிம்கள் எதிர்க்கிறார்கள் எனக் கூறி வந்தார். வடக்குக் கிழக்கு இணைப்பை எதிர்ப்பதாகத் தனது கையாட்களான ஒரு சில முஸ்லிம்களைக் கொண்டு கூறுவித்தார். இதுவும் ராஜீவுக்குத் தெரியும் இப்போது உண்மை வெளிவந்துவிட்டது இலங்கை அரசின் [illegible] யின்படி வடமாகாணத்துடன் கிழக்கில் உருவாக்கப்படும் சிங்கள மாகாணத்தை இணைப்பது பற்றி யோசிக்கவும் அரசு ஆயத்தமாக இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது வடக்குக் கிழக்கை இணைத்தால் அதனால் உண்டாகும் தமிழ் மாநிலத்தில் அங்கு திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களச் சிறுபான்மையினர் ஆக்கப்பட்டு விடுவார்களோ என்பதுதான் அரசின் கவலை. முஸ்லிம்களைப் பற்றிய கவலை அரசுக்கு இல்லை

கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்கள மக்களுக்காகத் தனிமாகாணத்தை அமைக்கத் திட்டமிட்ட ஜனாதிபதி, மலையகத்தில் வாழும் தமிழ் மக்களுக்காகத் தனியொரு மாகாணத்தை அமைக்கக் கனவிலுங் கருதாததேன்? இப்போது தர்மிஷ்ட ஜனாதிபதி தான் சிங்கள மக்களின் நலனை மாத்திரம் காக்குந் தலைவனே தான் என்பதை வெளிப்படையாகக் காட்டுகிறார். இதை உணர முடியாதவரல்ல ராஜீவ்.

சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் ஒரு நாட்டில், ஆட்சி அதிகாரங்கள் அனைத்தும் அவர்களிடமே உள்ள போது, ஒரு மாகாணத்திற்குள் சிங்கள மக்கள் சிறுபான்மையாக இருப்பதைச் சகிக்க இனவாத அரசின் கீழ் தமிழ் மக்கள் தன்மானத்தோடு வாழமுடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவும் பாரதப் பிரதமர் மறுப்பதேன்!

இந்நிலையில் இந்தியாவில் அடைக்கலம் புகுந்திருக்கும் தமிழ்ப் போராளிகளின் தலைவர்களைத் தடுப்புக் காவலில் வைத்தும், அவர்களிடமிருந்த ஆயுதங்களைப் பறித்தெடுத்தும், தொலைத் தொடர்புச் சாதனங்களை அபகரித்தும் அவர்களைப் பலவந்தப்படுத்தி இலங்கை அரசின் யோசனைகளை ஏற்றுக் கொள்ளச் செய்ய முயலுகிறது. இது எமது கருத்து

இதே நேரத்தில், தமிழர்கள் கொலை செய்யப்படுவதைத் தடுப்பதற்காக இலங்கை அரசின் மீது இந்திய அரசு எவ்வித நிர்ப்பந்தத்தையும் பிரயோகிப்பதாகத் தெரியவில்லை இதற்குரிய காரணம் என்ன? யாருக்கு என்ன நடந்தாலும் நடக்கட்டும். அதைப்பற்றி எமக்கு அக்கறையில்லை அண்டை நாட்டு அரசுகளின் ஆதரவையும் மதிப்பையும் பெற்று தென் கிழக்கு ஆசியாவில் இந்தியா ஒரு வல்லரசாக விளங்க வேண்டுமென்பதே பாரதத்தின் கொள்கை. இதை 'சார்க்' மாநாட்டில் தலைமையுரை நிகழ்த்திய பாரதப் பிரதமர் 'அயலவர்களை சிநேகமானவர்களாக வேண்டும் அப்படி இருப்பது நமது பலத்தை அதிகரிக்க உதவும்' என வெளிப்படையாகக் கூறியிருக்கிருர்.

'பயங்கரவாதம்' என்பதற்கு வரைவிலக்கணம் வகுக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுஞ் சூழ்நிலையில், 'சார்க்' அமைப்பின் தலைமைப் பதவியை ஏற்றுள்ள பாரதப் பிரதமரால், விடுதலைப் போராட்டத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் உள்ள வேறுபாட்டை வெளிப்படையாக எடுத்துக்கூறி அந்நாடுகளுக்கு உண்மை நிலையைப் புரியவைக்க முடியவில்லை. முதிர்ந்த அரசியல்வாதியான ஜே. ஆருக்கு பாரதப் பிரதமரின் இராசதந்திரம் சோடை போய்விட்டது. இந்நிலையில் முன்பு போல் 'எமது மத்தியஸ்தத்தை விரும்பாவிட்டால் வெளிப்படையாகச் சொல்லுங்கள். நாம் மத்தியஸ்தம் செய்வதிலிருந்து விலகி விடுகிறோம்' என இலங்கை அரசுக்கு இடித்துக் கூறுந்துணிவை இந்தியா இழந்து விட்டது எனவேதான் தன் நாட்டில் அடைந்தவர்களைப் பணிய வைத்து, இலங்கை அரசோடு இணக்கங் காணச் செய்வதற்கு ராஜீவ் முயற்சிக்கிருர்.

'எமக்கு உதவக் கூடிய அயல் நாடு எதுவும் இல்லை' எனத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த அன்றே கூறிய தந்தை செல்வநாயகம்கூட, தமிழகத்தின் ஆதரவு எமக்கு இல்லாமற் போகும் என என்றுமே கருதியதில்லை. இதுவரை காலமும் இன உணர்வால் ஒன்று பட்டு எமக்கு அனுதாபங் காட்டிய தமிழ்நாடும், இப்போது இந்தியப் பிரதமரின் முயற்சிக்கு உடந்தையாக இருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது நாம் தமிழ் நாட்டின் ஆதரவையும் இழந்திருப்பதாக உணர்கிருேம். தமிழ்நாட்டின் ஆதரவு குறைந்த காரணத்தை ஆராய்வதால் பயனில்லை

இந்நிலையில் நடப்பதெல்லாம் நன்மைக்கே எனக் கருதி, தன்கையே தனக்குதவி என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு, நிதானமாகவும் ஒற்றுமையாகவும் அனுபவத்தையும் அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி ஈழத்தமிழர்கள் செயற்பட வேண்டும். ✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கனமே சிறந்த செல்வம்
சிக்கன சலவைக்கு
மில்க்வைற் பார்சோப்பை
வாங்கி உபயோகியுங்கள்
பெரிய பார்சோப் ரூ. 12.00
சிறிய பார்சோப் ரூ. 6 00
மினி பார்சோப் ரூ. 2 00
2 மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் செய்தி (மார்கழி '86) ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

**சஞ்சீவி**

06-12-1986 சனிக்கிழமை

காலம் பெறுமதியானது
நுரைவளம் கூடிய
மில்க்வைற் சலவைப் பவுடர்
உங்கள் ஆடைகளை அதிவெண்மையாக சலவை செய்கிறது
56 கிராம் பைக்கற் ரூ 2 00 மட்டுமே.
10 மேலுறைகளை அனுப்பி அழகிய கைலேஞ்சியை ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

## பாதயாத்திரைக்கு இடையூறு விளைவிக்க சில இடங்களில் முயற்சி

யாழ்ப்பாணம், டிச. 6

விஜிதரனைத் தேடும் தொடர் போராட்டத்தில் அடுத்த நடவடிக்கையாக நடைபெற்று வரும் பாதயாத்திரைக்குச் சிற்சில இடங்களில் சில இனம் தெரியாதோரால் இடைஞ்சல் விளைவித்ததாக மாணவர் அமைப்புக் குழு பத்திரிகை அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

நேற்று கரவெட்டியிலுள்ள கிழவி தோட்டப் பிள்ளையார் கோவிலுக்கப்பால் அரை மைல் தூரத்திலுள்ள சனசந்தடியற்ற வயல் வெளியில் சில குண்டர்களினால் பாத யாத்திரிகர்கள் தாக்கப்பட்டனர். அங்கு நின்று ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்கிய பொதுமக்களும் பொல்லுகளினால் தாக்கப்பட்டனர். இதனால் அங்கு தற்காலிகமாக பாதயாத்திரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

எனினும் ஏனைய பிரதேசங்களில் பாதயாத்திரை தொடர்ந்து முன்னேறுவதாகவும் போராட்டம் தடைகளை மீறி தொடர்ந்து உறுதியுடன் முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)



சுபாஸ் விடுதியில் தேநீர் விருந்தின்போது விஜயகுமாரணதுங்க கலந்துரையாடுவதையும், அருகில் சிறிலங்கா மக்கள் கட்சி உதவிச் செயலாளர் ஜனுப் எம். எஸ். எம். அக்ரம் அமர்ந்து இருப்பதையும் முதல் படத்திற் காணலாம், மற்றைய படத்தில் பௌத்த குருமார்களில் சிலரைக் காணலாம்.

## விடைத்தாள் விமான மூலம் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், டிச. 6

நேற்று நடைபெற்ற பொ. த. (சாதாரண) க பொதுப்பரீட்சையின் விடைத்தாள்களை யாழ் கல்விப் பணிப்பாளர் பலாலி இராணுவ முகாம் மூலமாக கொழும்புக்கு அனுப்பி வைத்தார்.

விடைத்தாள் பொதிகள் பலத்த சோதனையின் பின்பே இராணுவத்தினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. (அ-5)

## ஜனாதிபதி அனுப்பிய வாய்மூலச் செய்தி

கொழும்பு, டிச. 6

ஜனாதிபதி ஜெயவர்த்தன, வாய் மூலமான செய்தி ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஸ்ரீலங்கா மக்கள் கட்சிச் செயலாளர் விஜய குமாரணதுங்க மூலம் அனுப்பியிருக்கிறார்

இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வரும்படியான வாய்மூல அழைப்பையே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன, திரு. விஜய குமாரணதுங்க மூலம் அனுப்பியுள்ளாராம்.

கடந்த வியாழன் கொழும்பில் ஜனாதிபதியைச் சந்தித்தபோதே ஜனாதிபதி இந்த வாய் மூல அழைப்பை விடுத்தார். (அ-ஐ-எ)

## இன்று

யாழ்ப்பாணம், டிச. 6

உரும்பராய் ஊரெழு வரியிறுப்பாளர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு உரும்பராய் ஞானவைரவர் கோயில் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். (அ-எ)

## காரைநகரில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 6

ஈழப் போராட்டமும் ஈழவர் பங்களிப்பும் என்ற தலைப்பில் இன்று மாலை 3-30 மணிக்கு காரைநகர் சைவ மகா சபை மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெறும்

ஈழப்புரட்சி அமைப்பினர் (ஈரோஸ்) நடத்தும் இக் கருத்தரங்கை சிவகௌரி கடற்றொழில் விரிவாக்கச் சேவைச் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது. (இ-10)

## கருத்தரங்கில் லலித்-சிவா

நியூயோர்க், டிச. 5

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம் சிவசிதம்பரம் கலந்துகொள்ளும் கருத்தரங்கு ஒன்றில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் கலந்து கொள்ளுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கருத்தரங்கு இம் மாதம் 13ஆம் திகதி நண்பகல் நியூயோர்க்கில் ஹலோரன் ஹவுஸில் நடைபெறும். ஸ்ரீலங்கா யூனியன் இதனை ஒழுங்குசெய்துள்ளது. (அ-எ)

கணக்கியல் கல்வியில்
ஓர் கலங்கரை விளக்கம்
பட்டப்படிப்புகள் கல்லூரி
I. A. B. — I. C M A.
A. A T. — CHARTERED
ஆரம்பம்: 7-12-1986
விபரங்களுக்கு:
உதவிப் பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஓம்

## திருமண அழைப்பு

மணமகன்: ஸ்ரீஸ்கந்தராசா B.Sc.
(ஆசிரியர் இந்துக் கல்லூரி / ம.ம.வி. திருகோணமலை)

மணமகள்: சாந்தினி
(ஆயுள்வேதக் கல்லூரி, யாழ்ப்பாணம்.)

இடம்: துர்க்கை அம்மன் தேவஸ்தானம்

காலம்: 11-12-86 வியாழன் காலை 6-00 — 8-00

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை விரும்பும்

பண்டிதர் சி வயிரமுத்து B A. உம் (ஓய்வுபெற்ற அதிபர்) பாரியாரும், 'குகபவனம்', போக்காலை ஒழுங்கை, உடுப்பிட்டி, 81, கல்லூரிய வீதி, திருகோணமலை.

டாக்டர் கி. விஜயரெட்ணமும் பாரியாரும், 'புவன வில்லா', தம்பிமுத்து உபாத்தியாயர் வீதி, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

# மொழிவாரி மாநிலமே தீர்வாக இருக்கவேண்டும்

## டிக்ஸிற்றிடம் கூறப்படும்

மட்டக்களப்பு, டிச. 6

வடக்கு - கிழக்கு இணைந்த மொழிவாரி மாநிலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமைய வேண்டும். அதற்குக் குறைந்த எதுவும் தீர்வாக முடியாது

இவ்வாறு கிழக்கிலங்கைப் பிரமுகர் குழு ஒன்று இன்று (சனி) காலை கொழும்பில் இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற்றைச் சந்தித்து வலியுறுத்தவுள்ளது.

தீர்வு காணப்படும் வரை கிழக்கு இலங்கைத் தமிழ் மக்களை இராணுவ நடவடிக்கைகளில் இருந்து இந்தியா காப்பாற்ற வேண்டும் என்றும் இத்தூதுக்குழு, இந்தியத்தூதரை வற்புறுத்தவுள்ளது.

இன்று காலை 11 மணி அளவில் இந்தியத் தூதரகத்தில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது

மட்டக்களப்புப் பிரசைகள் குழுவினர் இத்தூதுக் குழுவில் இடம்பெறவில்லை

'தூதுக்குழு அரசியல் ரீதியில் இந்தியத் தூதரைச் சந்திக்கச் செல்கின்றது எமது பிரசைகள் குழு அரசியல் சார்பற்றது ஆகவே நாம் செல்லவில்லை' - இப்படி குழுச் செயலாளர் சாம் தம்பிமுத்து சொன்னார். (அ-எ-21)

## நீண்ட - - -

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

தனர்.

சிறிலங்கா மக்கள் கட்சியைச் சேர்ந்த அரசியல் குழுப் பிரமுகர்கள் ஐந்துபேரும்மக்கள் கட்சி ஆதரவாளர்களும் இவர்களுடன் கூட வந்திருந்தனர்.

மாத்தறைப் பிரதேச மக்கள்கட்சி அமைப்பாளரும் கட்சியின் உதவிச் செயலாளருமான ஜனுப் எம். எஸ். எம். அகரப், கொம்பனித் தெருவைச் சேர்ந்த ஜனுப் முகமட் அலி ஆகியோரும் வந்திருந்தனர்.

கொழும்பு மத்தி மக்கள்கட்சி அமைப்பாளர் என். எஸ். ஞானரத்தினம் என்றதமிழரும் வந்திருந்தார்

கொழும்பு பத்திரிகையாளர்களும் வெளிநாட்டுச் செய்தி ஏஜென்சியைச் சேர்ந்தவர்களும், படப் பிடிப்பாளர்களும் இவர்களுடன் கூட வந்திருந்தனர்.

பின்னர் பௌத்த மத குருமார்கள் சுபாஸ் ஹோட்டலில் தங்கி நிற்க விஜேய் குழுவினரும் பத்திரிகையாளர்களும் சிறைபிடிக்கப்பட்ட சிப்பாய்களின் உறவினர்களும் பழைய பூங்காவுக்கு புலிகளினால் அழைத்துச் செல்லப்பட்டனர். (இ-10)

## சிப்பாய்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கால்களில் விழுந்து வணங்கி அழுதனர்.

அவர்களுக்கு ஆறுதல் கூறப்பட்ட பின்னர் இரண்டு சிப்பாய்களும் அங்கு கொண்டுவரப்பட்டனர்

சிப்பாய்களைக் கண்டதும் பெற்றோர், உறவினர்கள் ஓடோடிச் சென்று ஆனந்தக் கண்ணீர் பெருக இயபடி உச்சிமோந்து கட்டி அணைத்து மெய்மறந்து நின்றனர்.

இக் காட்சி மனதை நெகிழ வைப்பதாக இருந்தது

அஜித் சந்திரசிறியின் தந்தை வந்திருந்தார். அவரின் பெயர் பி. சுபசேன, மற்றும் அவரின் சகோதரி சுமனா சந்திரசிறியும் சகோதரன் நிஹால் சந்திரசிறியும், சிறிய தாயார் ஆரியவதியும், நண்பன் நீல் ரஞ்சனும் வந்திருந்தனர்.

சிப்பாய் பண்டாராவின் தாய் ஆர். எம். லீலாவதி வந்திருந்தார். மற்றும் அவரின் சகோதரர் தர்மகீர்த்தியும் தங்கை கே. டபிள்யூ. சுசீலாவும் வந்து இருந்தனர். பண்டாராவின் ஏனைய உறவினர்கள் நால்வர் வந்திருந்தனர். (அ-எ-10)

## கண் கலங்கினர் தொண்டா!

புல்லுமலைப் படுகொலை, தமிழ்ப் பெண்கள் கற்பழிப்புச் சம்பவங்கள் கேட்டு அமைச்சர் தொண்டமான் அதிர்ச்சி அடைந்தார்; கண்கலங்கினார்.

மட்டக்களப்பு, திமிலைதீவு ஐக்கிய இளைஞர் கழகத் தூதுக்குழுவினர் ஒன்று நேற்று அமைச்சர் தொண்டமானைச் சந்தித்து தங்கள் குறைகளைத் தெரிவித்தனர்.

புல்லுமலையில் 27 தமிழர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்; பெண்கள் கற்பழிக்கப்பட்டனர் — என்று தூதுக்குழு அமைச்சரிடம் சொன்ன போதே அமைச்சர் திடுக்கிட்டு "அப்படியா?" என்று கேட்டு கண்கலங்கினார்.

## பௌத்த குருமார்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மகாநாயக்கதேரர்.

இவர்தான் பௌத்த மதகுருமார்கள் குழுவுக்கு தலைமைவகித்து வந்திருக்கின்றார்

சிறை வைக்கப்பட்ட சிப்பாய்களை மீட்டு எடுப்பதை நோக்கமாகக் கொண்டுதான் இங்கு வந்திருக்கிறீர்களா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்—

சிறிலங்கா சிப்பாய்களைப் பார்ப்பதற்கு மட்டும் நாம் வரவில்லை. அதைக் காரணமாகத் தெரிவித்ததால் தான் யாழ் செல்ல எமக்கு அனுமதி கிடைத்தது

யாழ் தமிழ் மக்களை நேரிற்சந்திக்கவேண்டும், அவர்களின் குறைகளைக் கண்டு அவற்றை தென் இலங்கை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற மனப்பூர்வமான விருப்பம் காரணமாகவே நாம் வந்துள்ளோம்

தமிழர்களின் குறைபாடுகள் பல ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன

குறைபாடுகளைக் கவனித்து நிவாரணம் வழங்க அரசாங்கங்கள் தவறியதே இன்றைய நிலைமைக்கு காரணம் என்றார்.

புத்தபிரான் சாதிமத வேற்றுமையை வெறுத்தார் என்றும் ஒரு கட்டத்தில்அவர்சொன்னார். (அ-எ)

## புலிகளுடன்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது அரசாங்கத்திற்குள் உட்பூசல் இருப்பதை நிரூபிக்கிறது.

நீங்கள் வந்து எங்களுடன் பேசிய பின்னர் தான் அரசு தானும் அதிகாரிகளை அனுப்பியது- என்றும் கிட்டு தெரிவித்தார். (அ-10)

## தமிழ் தேசிய - - -

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

றார்

இதனாலேயே ஈழத் தமிழர்களுடைய அரசியல் சிந்தனையின் தனித்துவமான தேசியஉணர்வுகளும் கண்டு நிலைகொண்டு செம்மையும் செழுமையும் பெறுகிறது

சோவியத் ஒன்றியத்தின் சிறந்த விமர்சகரான பிளெக்னேவ் தனது 'கலையும் சமுதாய வாழ்க்கையும்' என்ற நூலில் கூறும் முழுமைக்கு வடிவத்தின் பரந்துபட்ட சமுதாய கூட்டுத்தொகை வினைவுகளின் இந்த இன சமூக தன்னுணர்வும் ஒன்றாகும்.

அந்நியர் ஆட்சிக்கு அடிமைப்படமுன்இருந்த நிலை, சுதந்திர இயக்க காலகட்டங்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள், சுதந்திரத்துக்குப்பின் தொடராக சங்கிலிக் கோவையாக ஏற்பட்டுவரும் இனரீதியான கசப்பான அனுபவங்கள், ஏமாற்றங்கள், விரக்திகள் தமிழ்த் தேசிய உணர்வை வலுப்படுத்தி தனித்துவத்தை வலியுறுத்தி வருகின்றன.

கைலாசபதி வாழ்ந்த சகாப்தத்தில் கைலாசபதியின் இலக்கியச் சேவை புதிய ஓர் இலக்கிய சகாப்தத்தை— அந்தப் பெரும் சகாப்தத்தில் உட்பிரிவாக உருவாகியது

அதே பெரும் சகாப்தத்தில் உருவான தமிழ் அரசியல் அனுபவங்கள் புதிய தமிழ் அரசியல் சகாப்தத்தை இன்னொரு உட்பிரிவாக உருவாக்கியது. இந்த உட்பிரிவு சகாப்தங்கள் கைலாசபதி வாழ்ந்த சகாப்தத்தின் உருவ அமைப்புக் காரணிகளே.

அவை கைலாசபதி விரும்பியிருந்தாலென்ன விட்டிருந்தாலென்ன ஒன்றையொன்று தழுவத் தவறவில்லை அந்த நிலையில் கைலாசபதியின் பங்களிப்பு தமிழ்த் தேசியத்தின் இக்காலத் தனித்துவப் போக்கிற்கும் வளர்ச்சிக்கும் காத்திரமான உரமாக அமைந்துள்ளது என்பதை எவரும் மறுக்கமுடியாது இந்த அம்சம் விரிவாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

(மல்லிகை 1983 மே சிறப்பிதழில் இருந்து ஒரு பகுதி)

## அரசியல்வீழ்ச்சி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

1980 ஆம் ஆண்டிலிருந்தே ஈரானுக்கு தென் ஆபிரிக்கா, இஸ்ரவேல் மூலம் ஆயுத விநியோகம் நடைபெற்று வருவதாக ஈரான் எதிர்ப்பு இயக்கமான முயாஹெடீன் தெரிவித்திருக்கிறது

இந்த விவகாரத்தை அடுத்து றேகன் பதவி துறக்கவேண்டும் என்ற கோரிக்கை அமெரிக்காவில் வலுத்து வருகிறது

பேச்சும் செயலும்

நிக்கரகுவா அரசாங்க எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா உதவி வழங்குவதை அமெரிக்காவின் இரு சபைகளுமான காங்கிரஸும் செனட்டும் எதிர்த்து வருகின்றன.

எந்த ஒரு அமெரிக்க ஜனாதிபதியும் செய்யத் துணிந்திராத மோசமான காரியத்தில் றேகன் இறங்கி இருக்கிறார் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

நிக்கரகுவா அரச எதிர்ப்புக் கிளர்ச்சியாளர்களுக்கு இப்பணம் சென்றது தமக்கு தெரியாது என்று அதிபர் றேகன் திரும்பவும் திரும்பவும் கூறிக் கொண்ட போதிலும் அதனை நம்புவதற்கும் பெரும்பாலான அமெரிக்க மக்கள் தயாரில்லை.

உலகிலேயே மகாபயங்கரவாதிகளாகக் கருதப்படும் லெபனான் ஷியா முஸ்லிம் கொரில்லாக்களால் சிறைப் பிடிக்கப் பட்டுள்ள அமெரிக்கர்களை விடுவிப்பதும் ஈரானுக்கான ஆயுத விற்பனை நோக்கங்களில் ஒன்று என்பதை வெள்ளை மாளிகை நிர்வாகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ஈரான் விவகாரம் அதிபர் றேகனின் பேச்சையும் நடத்தையையும் வெறும் கேலிக்கூத்தாக்கி விட்டது.

## இலங்கை அகதிகளை ஏற்றிவந்த கப்பல் கப்டன் விசாரணையின் பின் விடுதலை

பொன் டிச. 6

அத்திலாந்திக் சமுத்திரத்தில் உயிர் காக்கும் படகுகளில் 155 இலங்கைத் தமிழ் அகதிகளை இறக்கிவிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட மேற்கு ஜெர்மன் கப்பல் கப்டன் பின்டெல் விடுதலை செய்யப்பட்டார்.

பிரேமே கவன் என்ற இடத்தில் உள்ள நீதிமன்றத்தில் இவ் வழக்கு விசாரணைக்கு நேற்று வந்தது

"கப்டன் மின்டேல் மீது குற்றம் சுமத்துவதற்கு ஆதாரங்கள் இல்லை. தமிழ் அகதிகள் தாங்களாகவே கப்பலில் இருந்து உயிர்காக்கும் படகுகளில் இறங்கியுள்ளார்கள்"- இப்படி அரச வழக்குத் தொடருநர் கூறியதைத் தொடர்ந்தே கப்டன் விடுவிக்கப்பட்டார் (இ-ஐ-எ)

## அடகு வைத்தோர் சங்கக் கூட்டம்

அடகுவைத்தோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் வின்ஸர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மக்கள் வங்கியில் அடகு வைத்து மீளளிப்புக்காசப் பணம் செலுத்திய

## பிரச்சினையைத் தீர்க்க...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பார்கள். --

உங்களுடைய முயற்சியை நான் பெரிதும் பாராட்டுகிறேன். --

யாழ்ப்பாணத்திற்குத் தென் இலங்கை வாசிகள் வரப் பயப்படும் இவ் வேளையில் நீங்கள் பெரும் கஷ்டத்தின் மத்தியில் இங்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். அதனையிட்டு நாம் பெருமைப்படுகிறோம் —

ஸ்ரீ லங்கா அரசு விஜே குழுவினருக்குப் பயப்படுகிறது இவருடைய யாழ் விஜயம் லலித்தின் பொய்ப் பிரசாரங்களைப் பொடிப்பொடியாக உடைத்துக் கொண்டிருக்கிறது —

எங்களைப் பொறுத்தவரையில் நாம் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் அல்லர். --

இராணுவ உயர் அதிகாரிகளுடன் கூட நாம் கைகோர்த்து இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம் —

நாங்கள் உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவுமே போராடிக்கொண்டிருக்கிறோம். —

பேச வரட்டும்

சிங்கள அரசு சார்பாக யாராவது பேசுவதற்கு வந்தால் நாம் அதை ஏற்றுக்கொள்வோம். —

அவர்கள் வந்து பாதுகாப்பாக திரும்பிப் போவதற்கும் நாம் உறுதி கூறுவோம். —

எம்மால் சிறைப்பிடிக்கப்பட்ட சிப்பாய்கள் விடயத்தில் அரசு எந்த விதமான அக்கறையும் காட்டவில்லை. —

எமது கோரிக்கைகளுக்கும் அரசு இதுவரை செவி சாய்க்கவில்லை. —

இவ்வாறு பேச்சுவார்த்தைக்குத் தலைமைவகித்த தளபதி கிட்டு சொன்னார்.

திரு. விஜயகுமாரணதுங்க கோஷ்டியினர் பேச்சின்போது பதில் எதுவும் அளிக்கவில்லை.

இன்றைய இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் பதிலளிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. இந்தப் பேச்சுக்களில் பௌத்த குருமாரும் கலந்து கொள்வார்கள். (அ-10)

## விஜே குழுவினருக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தியில் விஜே பேசினார்.

ஆனையிறவு தடை முகாமில் விஜே குழுவினர் படையினரால வழி மறிக்கப்பட்டனர்.

பாதுகாப்புப் படையினர் விஜேயுடன் பேசினர். பாதுகாப்புக் காரணமாக பயணத்தை தொடர்வது நல்லது அல்ல என்று விஜேயுக்கு கூறப்பட்டது.

பௌத்த மதகுரு மார்களுக்குத் தலைமை வகித்துவந்த மகாநாயக்க தேரரும் இப்பேச்சில் கலந்து கொண்டார்.

சில மணித்தியாலங்கள் இதனால் யாழ் பயணம் தடைப்பட்டது

பின்னர் பயணத்தைத் தொடர விஜே குழுவினர் அனுமதிக்கப்பட்டனர்.

ஆனையிறவில் இருந்து 300 யார் தூரம் தள்ளி நின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளினால் விஜே குழுவினர் உற்சாகமாக வரவேற்கப்பட்டார்கள்

அங்கிருந்து ஆயுதம் தாங்கிய புலிகளின் பாதுகாப்புடன் விஜே குழுவினரின் யாழ் பயணம் தொடர்ந்தது

சாவகச்சேரியில் பெருந்திரளான மக்கள் குழுமி நின்று விஜே குழுவினரை வரவேற்றனர்.

சில இடங்களில் மக்கள் சாது! சாது!! என்று கோஷமிட்டு குழுவை வழியனுப்பி வைத்தனர்.

ஈழம் இறங்கிய பௌத்த மதகுருமார்களை மக்கள் கைகூப்பி வரவேற்று "உங்கள் பயணம் வெற்றியாக முடியட்டும்" என்று வாழ்த்தினர். (இ-உ)

## நூல் நிலையம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அமைய வேண்டும் என்பதல்ல நூல்கள் பழுதடையாமல் இருக்கும் வசதி இருந்தால் சிறு குடிசைகளிலும் அறிவாலயங்கள் அமையலாம். மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிதாக இருக்கும் போது சிறப்பு உன்னதமாகும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் [illegible] அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 06-12-1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15 Second Lane Power House Road, JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org